# சத்திய வேத பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA.

1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

Telephone: No. 300

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

| 87-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1962-ம் ஆண்டு பங்குனிமாதம் 4-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை — பிரதிசதம் 12 | 9-ம் இலக்கம் |
|---|---|---|


# பாப்பரசர் பத்துப் புதிய கருதினல்மார்களை நியமிப்பார்

பரிசுத்த பாப்பரசர் 23-ம்அருளப்பர் தாம் பத்துப் புதிய கருதினல்மார்களை அடுத்துவரும் மாதம் 19-ந்திகதி நியமிக்கவிருப்பதாக இம்மாதம் 17-ந்திகதி தெரிவித்துள்ளார். நியமனம் பெறவிருக்கும் புதியகருதினல்மாரின் விபரங்கள் வருமாறு:

1. அதிவண. மிக்கேல் பிறவுண் சுவாமிகள், அர்ச். சாமிநாதர் சபைத்தலைவர்.

2. பேறு தேசத்தின் (தென் அமெரிக்கா) லீமா நகரின் அதிமேற்றிராணியார்.

3. சிலி நாட்டிலுள்ள (தென் அமெரிக்கா) சந்தியாகோ நகரின் அதிமேற்றிராணியார்.

4. பெல்ஜியம்தேசத்தின் பிறஸ்ஸல்ஸ் நகரத்தின் அதிமேற்றிராணியார்.

5. போர்த்துக்கால்தேசத்தைச் சேர்ந்த பிதாப்பிதா யோசே தா கொஸ்தா நூணஸ், றோமன்திருச்சபைச் சொத்துக்களின் உபபரிபாலகர். இவர் முன்னாள் கோவா நகரின் பிதாப்பிதாவாக விருந்தவர்.

6. கீழைத்தேசக் கத்தோலிக்கச் சபைகளைக் கண்காணிக்கும் திருச்சங்கத்தின் பதில்காரியதரிசியான அதிவந். அகாசியோ கூஸ்ஸா ஆண்டகை அவர்கள்.

7. ஸ்பானியதேசத்தில் பாப்பரசரின் ஸ்தானிகராயிருந்துவரும் அதிவந். இல்டபிறுன்ட் அன்ரோனியூறி ஆண்டகை அவர்கள்.

8. போர்த்துக்கால் தேசத்தில் பாப்பரசரின் ஸ்தானிகராக இருந்துவரும் அதிவந். யோவான்னி பனிக்கோ ஆண்டகை அவர்கள்.

9. பெல்ஜியம் தேசத்தில் பாப்பரசரின் ஸ்தானிகராக இருந்துவரும் அதிவந். எவ்றேம் வோர்ணி ஆண்டகை அவர்கள்.

10. வத்திக்கானிலுள்ள பாப்பரசரின் நூல்நிலையத்தைக் கண்காணித்துவரும் மடாதிபதியான அதிவண. அன்சல் ஆல்பறேடா சுவாமிகள்.

இந்தப் 10புதிய கருதினல்மாரோடு கருதினல்மாரின் தொகை 87ஆக அதிகரித்துள்ளது. இதுவே திருச்சபை வரலாற்றில் கருதினல்மாரின் மிகக்கூடிய தொகையாகும். பாப்பரசர் தமது 3½வருட ஆட்சிக்காலத்தில் இந்தப் 10புதிய கருதினல்மாருடன், 50பேருக்குக் கருதினல் பதவி அளித்துள்ளார்.

## அர்ச்சியசிட்டர்களை ஆக்கிய கருதினல் 80 வயதில் மரணம்

திருச்சடங்குகள் சங்கத்தின் தலைவராயிருந்து புனிதர்களின் முத்திப்பேறுபெற்ற அர்ச்சியசிஷ்ட பட்டங்கள் சூட்டுவதற்கு ஆராய்ச்சிசெய்யும் பொறுப்புப் பெற்றிருந்தவரான கருதினல் கயித்தானோ சிக்கோஞ்ஞானி தமது 80-வது வயதில் றோமில் காலமாயினர்.

திருச்சபையின் ராசியதூதுவராய் நெடுங்காலஞ் சேவைசெய்தவர்களும் கருதினல் பதவிக்கு உயர்த்தப்பெற்ற இரு சகோதரரில் மூத்தவருமான கயித்தானோ, 2-ம் உலகமகாயுத்தத்தின்போது ஸ்பெயினில் பாப்புவின் தூதுவராய்ச் சேவை புரிந்தார். இவருடைய சகோதரரான அம்லெற்றோ பல்லாண்டுகளாக அமெரிக்காவில் ஸ்தானபதியாயிருந்து, தற்பொழுது பாப்புவின் அரசாங்கக் காரியதரிசியாகவிருந்து வருகிறார்.

காலஞ்சென்ற கருதினலவர்கள் திருச்சங்கத் தலைவராயிருந்த 5 ஆண்டுகளுள் 5 புனிதருடைய ஆராய்ச்சியைச் சித்திகரமாய் முடித்து அர்ச்சியசிஷ்டபட்டஞ் சூடச் செய்திருக்கிறார். திருவழிபாட்டைப்பற்றியும, திருநாள் அட்டவணையை எளிதாக்குவது, வானொலி, திரைப்படங்கள், இசைத்தட்டுகள், ஒலிப்பதிவு நாடா ஆலயத்தில் உபயோகிப்பதுபற்றியும் நிர்ணயஞ் செய்யக் காரணமாயிருந்தார். தேவதிரவிய அனுமானங்களை வழங்குவதில் சுதேசமொழிகள் உபயோகிப்பதுபற்றியும் தீர்மானஞ் செய்யக் காரணமா யிருந்தவருமிவரே.

இத்தாலியிலுள்ள பிறிசிகெல்லாவைச் சென்னபதியாகக் கொண்ட இவர் 1904-ம் ஆண்டு குருப்பட்டம்பெற்று றோட்டா சங்கத்தில் கடமையாற்றத் தொடங்கினர்; 12-ம் பத்திநாதரால் கருதினல் பதவிக்கு உயர்த்தப்பெற்றார். இரண்டாம்வத்திக்கான் சங்கத்தின் திருவழிபாட்டு ஆயத்தக்குழுவின் தலைவருமாயிருந்தார்.

## துறவறசபைகளின் பரிபாலனசங்கப் புதிய தலைவர்

திருச்சபையின் நிர்வாகத்தைக் கண்காணிக்க உரோமாபுரியில் திருச்சங்கங்கள் என்று அழைக்கப்படும் பல நிர்வாகச்சங்கங்கள் உண்டு. இவைகளுள் ஒன்று துறவறசபைகளைப் பரிபாலித்து வருகிறது. இச்சங்கத்துக்கு ஸ்பானிய தேசத்தைச்சேர்ந்த மகாமேன். கருதினல் லாறுவோனு ஆண்டகை அவர்கள் அண்மையில் தலைவராகப் பரிசுத்த பாப்பரசரால் நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்குமுன் அண்மையில்காலஞ்சென்ற கருதினல் சிக்கோஞ்ஞானி ஆண்டகை அவர்கள் தலைவராகக் கடமையாற்றிவந்தார். கருதினல் லாறுவோனு இதற்குமுன் மன்னிப்புகள் அளிக்கும் திருச்சங்கத்தின் தலைவராகக் கடமையாற்றிவந்தார்.

## கருதினல் முயெங் காலமானர்

உரோமாபுரியில் "உலகஇரட்சகர்"என்ற வைத்தியசாலையில் கடும்நோயால் பீடிக்கப்பட்டிருந்த மகாமேன்மைதங்கிய கருதினல் அலோசியஸ் ஜோசவ் முயெங் ஆண்டகை அவர்கள் இம்மாதம் பதினைந்தாம் திகதி தமது எழுபத்திமூன்றாவது வயதில் காலமானர். வத்திக்கான் இராட்சியத்தின் அலுவலகத்தில் கடமையாற்றிவந்த ஒரே ஒரு அமெரிக்க கருதினல் இவரே. இவர் மரிக்குமுன் பரிசுத்த பாப்பரசர் அவரைத்தரிசித்து அவருக்குத் தமது அப்போஸ்தலிக்க ஆசீர்வாதத்தை அருளினர். பத்துநாட்களுள் மரித்தமூன்றாவது கருதினல் இவரே ஆவர். இவருக்குமுன் இம்மாதம் 5-ந் திகதி கருதினல் சிக்கோஞ்ஞானியும், 6-ந்திகதி கருதினல் குவேய்யாவும் காலமானர்கள்.

## கியுபாவில் கனேடியகுருமார் வரவேற்கப்பட்டனர்

சென்ற கார்த்திகையில் கியுபாவிலிருந்து வெளியேற்றப்பட்ட 5கனேடிய குருமார் கஸ்திரோ அரசாங்கத்தால் திரும்பவும் வரவேற்கப்பட்டனர்.

குருமார் வெளியேற்றப் பட்டதையிட்டு கனேடிய அரசாங்கம் கண்டனஞ்செய்தபொழுது கியுபா அரசாங்கம் மன்னிப்புக்கோரி அக்குருமாரை ஏற்றுக்கொள்ளச் சம்மதித்தது. கனடாவிலுள்ள வேதபோதகசபைக்குச் சேர்ந்தவர்களான இக்குருமார் இருபதுபேர் கியுபாவில் திருவூழியம் புரிகின்றனர்.

## சிலியில் திருச்சபை நிலவுரிமையைக் கைவிடுகின்றது

சிலியிலுள்ள மேற்றிராசனங்களுக்குச் சொந்தமான பண்ணைகளையும், தோட்டங்களையும் பிரித்து கிராமத்தில் வதியும் குடும்பங்களுக்கு விற்பதென மேற்றிராணிமார் தீர்மானித்திருக்கிறார்கள்.

காணிச்சீர்திருத்தம்பற்றி அரசாங்கத்திட்டத்தில் ஒத்துழைக்கும்படி கிறிஸ்தவர்களைக் கேட்டு திருச்சபைக்குரிய நிலபுலங்கள் அதிகமல்லவாயினும் தாம் முன்மாதிரி காட்டவிரும்புவதாகக் கூறினர்.

இச்சொத்துக்களை விற்பது அம்மேற்றிராசனங்களுக்குப் பெருநஷ்டமாகும். ஏனெனில், இவைகளால் வந்த வருவாயைக் கொண்டே பள்ளிக்கூடங்களையும், தருமஸ்தாபனங்களையும் நடாத்திவந்தனர்.

## மூன்று குருமடங்களை ஸ்தாபித்தார்

மொசாம்பிக்கிலுள்ள லூறென்சோமார்க்ஸ் அதிமேற்றிராணியாரான கருதினல் தியோடோசியோ டே குலெய்யா தமது 72-வது வயதில் காலஞ்செல்லலாயினர்.

மடெய்ராவில் பிறந்து, றோமையிலுள்ள போர்த்துக்கீச குருமடத்தில் 1921-ம்ஆண்டு குருப்பட்டம் பெற்றார். எட்டுஆண்டுகளுக்குப்பின் அக்குருமடத்தின் உபதலைவர் ஆனர். இப்பதவியில் இருக்கும்பொழுது போர்த்துக்காலின் குடியேற்றநாடுகளில் கத்தோலிக்க ஆசிரிர்சபை தொகை மிகக்குறைவென்றதை உணர்ந்தார்.

1936-ல் மொசாம்பிக் அதிமேற்றிராணியாரானபொழுது குருமாராய் வரவிரும்பிய சுதேசிகளுக்கென மூன்று குருமடங்கள் ஸ்தாபித்தார். 12-ம்பத்திநாதர் 1946-ல் இவரைக் கருதினல்பதவிக்கு உயர்த்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்றிராசனங்கள் தரும் செய்தி

தாண்டவன்வெளிச் செய்தி

## புதிய தேவாலயத்தில் முதற் கொண்டாட்டம்

எமது பங்கில், ஊறணி—"இருதய புரத்தில்" அண்மையில் திறந்துவைக்கப்பட்ட, புதிய யேசுவின் திவ்விய இருதய தேவாலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை, முதலாவது கொண்டாட்டமாகப் பாலர்தினக் கொண்டாட்டத்தை வெகுசிறப்பாகக் கொண்டாடினர்.

இதுவே இப்பகுதிக் கிறிஸ்தவர்களுக்குப் புதியதேவாலயத்தில் முதற் கொண்டாட்டமாகையால் அன்று ஏராளமான பாலர் பாலிகைகளும், சிறுவர் சிறுமிகளும் திவ்விய பாலகயேசுவின் கொடியைத்தாங்கிய வண்ணம் கோயில் வளவு முற்றிலும் காணப்பட்டனர். காலை 8-15க்கு எங்கள் கட்டளைக்குரவர் வண. ஜோர்ஜ் ஈ. எல். வம்பேக் சுவாமி அவர்களால் பாட்டுப்பூசை, நிறைவேற்றப்பட்டு, "சிறுவர்களை நம்மிடம் வரவிடுங்கள். ஏனெனில், மோட்ச இராச்சியம் அவர்களுடையது" என்னும் சுவிசேஷ வாக்கியம்பற்றி விளக்கமான ஒரு பிரசங்கமும் சொல்லப்பட்டது.

பூசையின்பின், நான்கு சிறுவர்கள் பாலகயேசுவை ஏந்திச்செல்ல, ஏனையோர் கோவில்வளவில் பாடல்களுடனும், செபங்களுடனும் சுற்றுப்பிரகாரமாகச் சென்ற காட்சி சம்மனசுக்கள் கூட்டம் வரிசையாய்ச் செல்கின்றது என்றே கூறும்படியாய்க் காட்சியளித்தது. சுற்றுப்பிரகாரத்தின்பின், கட்டளைக்குரவர் அங்கு கூடியிருந்த சகல சிறுவர்களையும் திவ்விய பாலகயேசுவின் திருச்சுரூபத்தினால் ஆசீர்வதித்தார். பாப்பரசரின் சொந்தச்சபையாகிய இப்பாலக சபையில் ஏராளமான சிறுவர்கள் சேர்ந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

— நிருபர்.

மாத்தளையில்

## வேதபோதக முயற்சிகள்

மாத்தளைப்பங்கில் அளவத்துகொடை, வாட்டன் தேயிலைத் தோட்டத்தில் ஆணும், பெண்ணும், சிறுருமாய் ஐம்பது கத்தோலிக்கமக்கள் பணியாற்றுகின்றனர். இவர்கள் தேவவழிபாட்டில் மிகவும் குறைவுடையவர்களாகவே சீவித்துவருகின்றனர். இவர்களைச் சீர்ப்படுத்தி தேவவழிபாட்டில் முன்னேறப்பண்ணும் பொருட்டு மேற்படி பங்குக்குரவரான அதிவண. லூசியன்பெரேரா ஞானத்தந்தையரின் இடையறு முயற்சியால் மாத்தளைமரியாயின் பிரான்சீஸ்கன் சபைச்சகோதரரில் ஒருவரைத்தெரிந்து, அன்னாருக்கு வேதோபதேசபாடம் கற்பிக்கும்படி 1-2-62-ல் அங்கு கூட்டிச்சென்று ஒப்பிக்கலானார். அன்று தொடக்கம் அச்சகோதரர் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் அங்குசென்று பின்னேரமும் மறுநாள் காலையும் தங்கிநின்று அவர்களுக்கு ஞானோபதேசம், சங்கீதம் கற்பித்து அவர்களோடு செபதப முயற்சிகளில் ஈடுபட்டுவருகிறார்.

பெற்றாரை மேலும் மேலும் உற்சாகப்படுத்தும் நோக்கமாய் அவர் அவ்வனைச்சனங்களை ஒன்றுசேர்த்துப் பங்குக்குரவரின் அனுமதியோடு ஒரு சங்கத்தை அர்ச். அந்தோனியார் சன்மார்க்க சங்கமென்ற நாமத்தோடு 20-2-62-ல் ஆரம்பிக்கலானார். அச்சங்கத்துக்கு உரியமுறைப்படி தலைவர், காரியதரிசி, தனாதிகாரி, நிர்வாகசபையார் எனப்பலரைத் தெரிந்து ஏற்படுத்தலானார். அதற்கு வண. பங்குக்குரவர் ஞானாதிபராகவும், சங். சகோதரர் போஷகராகவும் ஏற்படுத்தப்பட்டனர்.

அச்சபையாரால் இலகுவில் அனுட்டிக்கக்கூடிய செபதப ஒழுங்குமுறைகள் சபையாரின்சம்மதத்தோடு ஆக்கப்பட்டன. இவைகளையெல்லாம் தவறாமல் எப்போதும் வெகு சிரத்தையுடன் விடாமல் அனுசரித்து வருவோமென்று எல்லோரும் ஒரேகுரலாய் ஏற்றுக்கொண்டனர்.

அர்ச். அந்தோனியாரின் விசேஷ சலுகையால் இக்கத்தோலிக்க ஏழைமக்கள் முன்னேற்றமடைவர் என்பதே எமது நம்பிக்கை.

* தற்போது அங்கிரி, கந்தேநுவரை, வாரியப்பளை, வாட்டன் தோட்டங்களில் மாத்தளை மரியாயின் பிரான்சிஸ்கன் சபையார் வேதம்போதித்து வருகின்றனர்.

— நிருபர்.

தவளந்தன்னையில்

## தேவதாயின் வருடாந்த மகோற்சவம்

**"கிறிஸ்தவ குடும்பங்கள் உத்தம பரிசுத்ததனத்தை அடையவும், உண்மையான கிறிஸ்தவ சீவியத்தைச் சீவிக்கவும், விசுவாசத்தில் நிலைத்திருக்கவும் மன்றாடுங்கள்." இவ்வாறு கண்டி மேற்றிராணியார் அதிவந். லீயோ நாணயக்கார, ஓ. எஸ் பி. ஆண்டகை** அவர்கள் தவளந்தன்னை தேவமாதாவின் வருடாந்த மகோற்சவமாகிய கடந்த (18-2-62) ஞாயிறுவாரத்துக்கு முதல்நாள் சனிவாரம் மாலையாராதனையின்போது செய்த பிரசங்கத்தில் குறிப்பிட்டார். மேலும் அவர் தொடர்ந்து பேசுகையில், நம்பரிசுத்த தந்தை 23-ம் அருளப்ப பாப்பாசரும், முழுஉலகிலும் கத்தோலிக்க குடும்பங்கள் உத்தமதனத்தில் வளர்ந்துவர்த்திக்க வேண்டுமென்ற பேராவலுடன் இருக்கிறார் என்றார். உலகமெங்கும் திருச்சபைமக்கள் இன்னற்படுவதையும், உபத்திரவ நெருக்கிடைப்படுவதையும் குறிப்பிட்டு, நாம் கடவுள் நம்பிக்கையுடனும், விசுவாச உறுதியுடனும் இருப்போமானால் உலகதுன்பங்களையும் கஷ்டங்களையும் பொறுமையோடு சகித்துக்கொள்ளும் பலம் எமக்கு அளிக்கப்படும் என்றும் அந்த வரத்தைத் தேவதாயாரிடம் இரந்து வேண்டிக்கொள்ளும்படியும் கூறினார்.

அன்று சனிவாரம் 17-2-62 மாலையில் மேற்றிராணியாண்டவர் அவர்களால்வேஸ்பர்பாடப்பெற்றுத் திவ்விய நற்கருணை ஆசீர்வாதமருளப்பட்டது. ஆசீர்வாதத்தின்பின் தேவதாயின் திருச்சொரூபம் பவனியாகக்கொண்டு செல்லப்பட்டது. பெருந்தொகையான கிறிஸ்தவர்களும், இந்துக்களும், அயல் கிராமங்களிலும் சுற்றுப்புறங்களிலுமிருந்து திருநாளுக்குவந்திருந்தனர். திருப்பவனி பார்ப்போரைப் பரவசமாக்கியது. மெழுகுவர்த்தி வெளிச்சங்களை ஏந்தியவண்ணம் மக்கள்திருச்சொரூபத்தைப்புடைசூழ்ந்து,செபத்துடனும், பக்திப்பாடல்களுடனும் பவனிவந்தனர்.

மறுநாள் ஞாயிறுவாரம் மேற்றிராணியாண்டகையவர்கள் முதற்பூசையை நிறைவேற்றினார். அப்பூசையில் மேற்றிராணியார் சிறுவருக்கு முதன்நன்மை அருளினார். இரண்டாம்பூசை கட்டளைக்குரவர் **வண. டி. எம். சேவியர், ஓ. எஸ். பி.** அவர்களால் நிறைவேற்றப்பட்டது.

பூசையின்போது வண. கட்டளைக்குரவர் அவர்கள் [illegible] உத்தமவிசுவாசம் வேரூன்றித்தழைக்க தேவதாயாரைப்போன்ற விசுவாசப்போக்கும், தேவசித்தத்துக்குப் பணிந்தமனதும் விசுவாசிகளிடம் அதிகரிக்க அவவுடைய உதவியை மன்றாடி, அவவைப் பின்பற்றிவாழும்படி புத்திபுகட்டினார்.

பூசையின்பின்னர் ஐம்பதின்மருக்கு மேற்பட்டவர்களுக்கு மேற்றிராணியார் உறுதிப்பூசுதல் தேவதிரவிய அனுமானத்தை அருளினார். அதை அடுத்து திவ்வியநற்கருணை ஆசீர்வாதமும் மேற்றிராணியாரால் அருளப்பட்டதும் திருநாள் இனிதே முடிவெய்தியது.

நுவரேலியா புனிதசவேரியார் கல்லூரி ஆசிரியர்களும், நல்லாயன் மகளிர்பாடசாலை மரியாயின் சேனை பாலர்பிரசிடிய மாணவிகளும் திரு[illegible] பாடகர்களாக இயங்கித் திரு[illegible]த்தனர்.

## முதல்வருட நல்மரண ஞாபகம்

தோற்றம் 18-10-1880



மறைவு 5-3-1961

ஞானசந்தியாப்பிள்ளை அவர்கள் பரமபதமடைந்த

### முதல்வருட நிறைவுதினம் 5-3-62

அன்றுகாலை 7மணிக்கு சில்லாலை, மரியநாயகிஆலயத்தில் அவவது ஆன்மசாந்திக்காக ஓர் துக்கப்பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும். இவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறோம். சமாதானத்தில் இளைப்பாறுவாராக.



காம்பன், வஸ்தியாம்பிள்ளையின் சிரேஷ்டபுதல்வன்

அல்போன்ஸ் அவர்களின்

### 1-ம் வருட மரணஞாபகம்

**தோற்றம்: 5-10-29 மறைவு: 3-3-61**

எனது நேசபத்தாவும், எங்கள் அருமைத் தந்தையுமாகிய வஸ்தியாம்பிள்ளை அல்போன்ஸ் அவர்களின் 1-ம்வருட ஞாபகத்திற்காக வல்வெட்டித்துறை, அர்ச். செபஸ்தியார் தேவாலயத்தில் 3-3-62 சனிக்கிழமை காலை 7மணிக்கு ஓர் துக்கப்பாடற்பூசை நிறைவேறும். இதைக்கண்ணுறும் வண. குருப்பிரசாதிகளும், சங். சந்நியாசர், கன்னியாஸ்திரிகளும், உறவினர், சிநேகிதர் ஏனையோரும் அவரின் ஆன்மஇளைப்பாற்றி[illegible] விசேஷவிதமாய் வேண்டிக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

மரணபரியந்தம் எம்மை நேசித்தார்
சீவியத்தில் நாம்அவரை நேசித்தோம்
மரணத்தின்பின் மறவாதிருப்போமாக

மரித்த விசுவாசிக்கு நித்தியஇளைப்பாற்றியைக் கொடுத்தருளும்.

அருமைப் பத்தாவைஇழந்து
துயருறும்:
அல்போன்ஸ் மேரிதிரேசா

அருமைத் தந்தையை இழந்து
துயருறும்:
அக்கினெஸ் ஜெயருணி, செல்வானந்தராபி, அலெக்சாண்டர் விஜயரட்டினம், செல்வானந்த ராபன்.

கிழக்குரோட்.
வல்வெட்டித்துறை.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 3624

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

வட்டுக்கோட்டை மேற்கு

(1) நாகலிங்கம் கைம்பெண் முத்தாச்சிப்பிள்ளை, (2) எஸ். முருகேசு, (3) மனைவி மகேஸ்வரி. —வழக்காளிகள்

எதிராளிகள்

(1) சபாபதி மார்க்கண்டு, (2) மனைவி பொன்னம்மா இருவரும்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 3624-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இருதுண்டுக் காணிகளை 1962-ம்ஆண்டு பங்குனிமீ 26-ம்உ திங்கட்கிழமை (26-3-62) பிற்பகல் 2மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 6,780-00-உம், 17-9-60 தொடக்கம், 8-12-60 வரைக்கும் ரூபா 5,000-த்துக்குப் 10%வட்டியும், அதன்பின் கூடிய முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5%வட்டியும். இதில் ஏற்பட்டசெலவு 186ரூபா 60சதம். வெலியாத்துச்செலவு 50ரூபா 85சதம். வரும்செலவு 32ரூபா 95சதம்.

### ஆதன அடர்பு

1. வடமாகாணம் யாழ்ப்பாணடிஸ்திறிக் சங்கானைகோயிற்பற்று தெலிபுரம் இறை, "வண்ணாத்திடலை" என்னும் காணி நிலப்பரப்பு 17½. (உலாந்தா அளந்த கணக்குப்படி நில. பர. 16-உம், 6 குளியும்.) இதில் வீடும்,கிணறும்உண்டு. எல்லை: கிழக்கு — ஆசையர் காத்திகேசுவின் மனைவி தங்கம். காத்திகேசு தம்பு. கதிர்காமு பொன்னையா. வேலுப்பிள்ளை கந்தையா. வடக்கு — வேலுப்பிள்ளை முருகேசு. மேற்கு — வேலுப்பிள்ளை சின்னையா, வைரு கந்தையா, பாண்டுரி முத்தர், குமாரு பொன்னையா. தெற்கு— ரோட்டு. இது அடங்கலும் சொரியலாய் அறைவாசி. பதிவுஇல. E 320/243

2. மேற்படிகூறிய சங்கானை கோயிற்பற்று, மூளாய்இறை நிலப்பரப்பு $17\frac{1}{2}$. (உலாந்தா அளந்த கணக்குப்படி நில. பர. 19) இதில் வடக்குப்பக்கத்தில் கிணறும், மேற்குப்பக்கத்தில் தண்ணீர்வாய்க்காலும் உண்டு. எல்லை: கிழக்கு — உரித்தாளரும், பேரம்பலம் கணவதிப்பிள்ளை. வடக்கு — உரித்தாளரும், கந்தையா மனைவி வெள்ளையம்மா, செல்லப்பா கைம்பெண் செல்லம்மா. மேற்கு — குலவீரசிங்கம் மனைவி நாகம்மா, ஈஞ்பூலை கைம்பெண் சின்னப்பிள்ளை, சின்னப்பெடி முத்தர். தெற்கு — சின்னத்தம்பி கதிர்காமத்தம்பி, கனகசபாபதி சுந்தரம்பிள்ளை இது அடங்கலும் சொரியலாய் அரைவாசி. பதிவுஇல. E 316/94.

**இ. கனகரத்தினம்**

கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.
நம். 35, கொழும்புத்துறைரோட்,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுச்செய்திகள்

### அரசாங்கம் வாங்கும் நெல்

இவ்வருடத்திலே அரசாங்கம் விவசாயிகளிடமிருந்து உத்தரவாத விலைத் திட்டத்தின்கீழ் 2 கோடியே 40 இலட்சம் புசல் நெல் வாங்கத் தீர்மானித்துள்ளது. இதனைச் சேமித்துவைப்பதற்காக நெல்விளையும் பகுதிகளிலே 58 இலட்சம் ரூபா செலவில் நெற் சேமிப்புநிலையங்களை விவசாயசேவைப் பகுதி அமைத்துவருகிறது. மட்டக்களப்பு, அனுராதபுரம், குருநாகல் போன்றஇடங்களிலே இவைகள் விரைவில் அமைக்கப்படவிருக்கின்றன.

### விபத்தில் இறந்த ஜப்பானியர்

தற்பொழுது கொழும்புத் துறைமுகத்தில்தங்கிநிற்கும் 'ஜின்யோமாறு' என்ற ஜப்பானிய கப்பலிலே இலங்கையைச்சுற்றி உல்லாசப்பிரயாணஞ்செய்யும் நோக்கமாக வந்திருந்த நான்கு ஜப்பானியர்கள் சென்ற வெள்ளிக்கிழமை ஒரு 'ராக்ஸி'யிலே கொழும்பிலிருந்து கண்டிக்குச்சென்று திரும்பும் வழியில் கொழும்பிலிருந்து 33 மைல் தூரத்திலே அவர்கள் பிரயாணஞ்செய்த ராக்ஸி ஒருபஸ்ஸுடன் மோதியமையால் நால்வரும் உயிர்துறந்தார்கள். ராக்ஸியின் சாரதியான எச். எஸ். பெறேறாவும் இறந்துபோயினன்.

### பாட்டியின் கண்தானம்

கழுத்துறையைச்சேர்ந்த மகாவஸ்கடுவா எனும்கிராமத்தில் வசித்திருந்த 65 வயதுடைய றோஸா நோனு என்ற பாட்டி சாகும்வேளை தனது கடைசி விருப்பமாகத் தனது கண்களைக் கொழும்பிலுள்ள கண்ஆஸ்பத்திரி அதிகாரிகளிடம் கையளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டாள். அவள் மரணித்ததும் அங்குள்ள கண்தானம் செய்வாரின் சங்க காரியதரிசி கொழும்புக்கு ஓடோடியுஞ் சென்று அவருடைய ஆசையைப் பூர்த்திசெய்யுமாறு அங்கு டக்றர் ஹட்சன் சில்வாவை உடனடியாக அழைத்துச் செல்லலாயினர்.

### புதிய கவர்னர் - ஜெனறல்

இதுவரை இலங்கையின் கவர்னர்-ஜெனறலாக இருந்துவந்த சேர் ஒலிவர் குணதிலக்கா அவர்களுக்குப் பதிலாகத் தற்போது வாஷிங்ரன் நகரிலே அமெரிக்க அரசாங்கத்தினிடமாக இலங்கைத் தூதுவராய் இருந்துவருகிறவரான திரு. வில்லியம் கோபல்லா அவர்களை அரசாங்கம்செய்துள்ள சிபாரிசின் பேரிலே புதிய கவர்னர் – ஜெனறலாக நியமனஞ்செய்வதை எலிசபேத் மகாராணி அங்கீகரித்திருக்கின்றார். இந்த நியமனம் பங்குனி 2-ந் திகதி வெள்ளிக்கிழமை நடைமுறைக்குவரலாயிற்று.

### கல்லூரிப் புதிய அதிபர்

யாழ்ப்பாண மத்திய கல்லூரியின் தற்காலிக அதிபராய்க் கடமையாற்றி வந்தவரான திரு. ஏ. ஈ. தம்பர் அவர்கள் தற்போது அப்பதவியிலே நிரந்தரமாக நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்றார். அக்கல்லூரியிலே ஒரு பேராசிரியராய் 34 வருடகாலம் சிறப்பாகக் கடமையாற்றியுள்ள இவர் அநேகவருடங்களாக அதன் உதவி அதிபராகவும் இருந்துவரலாயினர். வட மாகாண ஆசிரியர்கள் சங்கத்தினதும், அகில - இலங்கை ஆசிரியர்கள்சமாசத்தினதும் தலைவராயும், "சிலோன் ரீச்சர்" என்ற ஆசிரியர் சஞ்சிகையின் ஆசிரியராயும் இவர் அநேகவருடகாலம் பதவிகள் வகித்திருந்து ஆசிரியஉலகுக்கு ஆற்றியுள்ள சிறந்தசேவை பாராட்டத்தக்கதாகும்.

### ராக்ஸிகளும் சாரதிகளும்

இனிமேல் 'ராக்ஸி' கார் சாரதிகள் தங்கள் பிரதிமைப்படங்களைத் தங்களுடைய கார்களிலே ஒட்டிவைக்குமாறு கேட்கப்படவிருக்கிறார்கள். இத்தச் சாரதிகளினால் இம்சிக்கப்படுவோர் அவர்களை இலகுவிலே அடையாளம் கண்டுகொள்வதற்கே இந்த ஏற்பாடாகும்.

### சுயதேவைப் பூர்த்தி

இலங்கை ஐந்து பொருட்களில் மட்டுந்தான் — அதாவது சாராயம், மெழுகுவர்த்தி, குளிர்பானம், சலவைச்சோப், ஒட்டுப்பலகைக் கதவுகளாகிய ஐந்திலுந்தான் சுயதேவைப் பூர்த்தி அடைந்திருக்கிறதென்று கைத்தொழிற்பகுதித் தலைவரின் நிர்வாக அறிக்கை தெரிவிக்கின்றது. இன்னும் 'ரி' ஷேட், வாசனைச்சோப், தீப்பெட்டி, சிகறெற், பருத்திறேயன், பனியன், றப்பர் காலணி, சுருட்டுப் புகையிலை, பருத்திச் சில்க்ஷேட், வரைதல் புத்தகம், பிஸ்கோத், மிட்டாய், கிளாஸ்போத்தல், சிமெந்து, அஸ்பெஸ்ரோஸ் ஓடுகள் ஆதியன எண்பது சதவிகிதம்வரை சுயதேவைப் பூர்த்தி அடைந்துள்ளனவாம். இலங்கையில் இரு சீனித்தொழிற்சாலைகள் இருந்தபோதிலும் இவற்றில் செய்யப்படும் சீனி இரண்டுசதவிகிதம்தான் சுயதேவையையே பூர்த்திசெய்கின்றது.

### பேச்சுகளும் ஒலிப்பதிவும்

சபையிலே நிகழ்த்தப்படும் பேச்சுகளையெல்லாம் ஒலிப்பதிவு செய்யவேண்டுமென்று யாழ்ப்பாண மாநகரசபைக் கூட்டத்திலே முன்னர் ஒரு சந்தர்ப்பத்தில் வற்புறுத்தியவரும், முதலாம்வட்டார அங்கத்தவருமான திரு. ஏ. ஜி. இராசசூரியர் அவர்கள் தமது விருப்பத்தை அன்று நடந்த மேயர் தேர்தலின்போது தம்முடைய சொந்தச்செலவில் நிவைவேற்றிவைத்தனர். ஒலிப்பதிவுக் கருவி ஒன்றுடன் கூட்டத்திற்குச் சமுகமளித்த அவரால் புதியமேயர் தேர்தலுடன் சம்பந்தப்பட்ட சொற்பொழிவுகளில் ஒருபெரும் பகுதி ஒலிப்பதிவுசெய்யப்படலாயிற்று.

### இசை நடனக் கலாசாலை

கொழும்பிலுள்ள சிங்கள இசை நடனக் கலாசாலை போன்ற ஓர் அரசாங்க இசைநடனக் கலாசாலையை யாழ்ப்பாணத்திலும்அமைத்து, அதன் மூலம் என். சி. ஏ. எம். எஸ். இசைப் பரீட்சைகளுக்கும், மற்றும் இசைப் பட்டப் பரீட்சைகளுக்கும் மாணவர்களைப் பயிற்றுவிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்ற ஓர் பிரேரணை அன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற அகில-இலங்கை இசையாசிரியர் சங்கத்தின் விசேஷ பொதுக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியிருக்கின்றது.

### ஆசிரிய நியமனம் இல்லை

பாடசாலைகளிலே ஆசிரியர்கள் பதவிக்குச் சுமார் 7,000 காலி ஸ்தானங்கள் இருந்தபோதிலும் பண நிலைமை காரணமாக இவ்வருடம் எவரும் நியமனஞ் செய்யப்படவில்லை; சென்ற வருடம் பாடசாலைகளில் 7,200 ஆசிரியர்கள் நியமனஞ் செய்யப்பட்டனர். புதிய பாடசாலைகளைக் கட்டுவது அரசாங்கத்துக்கு ஒருபெரும் பிரச்சினையாக வந்திருக்கிறது; ஆனால், இருநேரப் பாடசாலைகளை வைப்பதின்மூலம் இப்பிரச்சினை தீர்ந்துவிடுமென்று கல்வி மந்திரியின் பாராளுமன்ற காரியதரிசி இரத்தினபுரியிலே சென்ற வெள்ளிக்கிழமை பேசுகையில் தெரிவித்திருக்கின்றார்.

### சுதேசிவார ஏற்பாடு

சித்திரை வருடப்பிறப்பை முன்னிட்டு உடுப்பிட்டித்தொகுதி நெசவு நிலையங்கள் சுதேசிவாரத்தைக் கொண்டாடுமுகமாகப் புடவைகளின்உற்பத்தியைப் பெருக்கும்முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளன. புதுவருடப்பிறப்பிற்கு முன்னதாக ஒருவாரகாலம் கைத்தறிப் புடவைகளின் விற்பனை நெல்லியடிச் சந்தையில் ஆரம்பமாகி நடந்தேறுமெனத் தெரியவருகிறது.

### வானவெளி யாத்திரைக் காட்சி

அமெரிக்க வானவெளிவீரர் ஜோண் கிளனின் வானவெளி யாத்திரை சம்பந்தமான பிரதிமைப்படக் காட்சி ஒன்று யாழ்ப்பாணத்திலுள்ள அமெரிக்க தகவல்நிலையத்திலே சென்றவெள்ளிக்கிழமையன்று ஆரம்பமானது. இதிலே வானவெளிப் பிரயாணத்தை அவர் நடத்திய விதங்களைத் தெளிவாக விளக்கும் அநேகபடங்கள் இடம் பெற்றிருக்கின்றன.

### அப்போதிக்கரிமாருக்குச் சலுகை

அரசாங்கசேவையிலே பத்துவருடகாலம் நோயாளருக்குச் சிகிச்சை அளித்துள்ள அப்போதிக்கரிமார் இளைப்பாறியபின்னர் பிரத்தியேகமாக வைத்தியத்தொழில் நடத்த அனுமதிக்கப்படவிருக்கிறார்கள். டக்றர்மாரின் தட்டுப்பாடு காரணமாகத் தற்போது கொழும்பு அரசினர் பெரிய ஆஸ்பத்திரி நீங்கலாக ஏனைய ஆஸ்பத்திரிகளிலெல்லாம் நோயாளரைப் பரிசோதனை செய்து சிகிச்சையளிக்க அப்போதிக்கரிமார் அனுமதிக்கப் பட்டிருக்கிறார்கள்.

### அமெரிக்க வானவெளி வீரர்

அமெரிக்காவின் முதலாவது வானவெளிவீரரான கர்னல் ஜோன் கிளென் என்ற விமானி 1300தொன் நிறையுள்ள ஒரு வானவெளிக் கப்பலிலே சென்ற வாரம் செவ்வாய்க்கிழமை வானவெளிக்குச் சென்று பூமியிலிருந்து சுமார் 160 மைல் உயரத்திலே மணிஒன்றுக்குப் 17,545 மைல் வீதம் மும்முறை பூமியை வலம்வந்து, 4மணி 56 நிமிஷ நேரத்தில் 81,000 மைல்தூரம் பிரயாணஞ்செய்து, சேமமாக மறுபடியும் பூமியில்வந்து சேரலாயினர். இவர் 88·29 நிமிஷங்களுக்கு ஒருமுறை பூமியை வலம்வந்தார். அவர் பூமிக்குத் திரும்பி அத்திலாந்திக் சமுத்திரத்தில் இறங்கியதும் அவரைக் ஹெலிக்கொப்றர்கள் வானவெளிக்கப்பலுடன் தூக்கி அண்மையில் காத்துநின்ற அமெரிக்க போர்க்கப்பலுக்கு எடுத்துச்சென்றன. 40 வயதானஇவர் தனது வானவெளிப் பிரயாணமுழுவதிலும் தகவல்நிலையங்களுடன் தொடர்புகொண்டிருந்தார் என்பதும் குறிப்பிடற்பாலதாகும்.

● பொதுத்தேர்தல் சம்பந்தமாய் 72 வயதுடைய இந்திய பிரதமர் நேரு 73 முறை விமானங்களிலே 98 மணிநேரம் பறந்து, 16,362 மைல் தூரம் சுற்றுப்பிரயாணஞ் செய்திருக்கின்றார். பொதுவிலே அவர் 31 நாள் சுற்றுப்பிரயாணஞ்செய்து, 88 நகர்களைத் தரிசித்து, 90 மேற்பட்ட கூட்டங்களிலே 76 மணிநேரம் பேசியிருக்கின்றார்.

● பர்மாவின் ஜனாதிபதியுடைய சம்பளத்துக்கு வருமானவரிவிதிப்பதற்கான மசோதாஒன்று அதன் பிரதிநிதிகள் சபையில் நிறைவேறியிருக்கிறது. அவருடைய மாதச்சம்பளம் 5,000 ரூபாவாகும். அத்துடன் அவரது படிச்செலவும் குறைக்கப்பட விருக்கிறது.



### 15-ம் வருட மரண ஞாபகம்

பிறப்பு: 9-3-1902 இறப்பு: 6-3-1947

இலங்கை அரசாங்க புகையிரதப்பகுதியில் கிறேற்வெஸ்ரேன் ஸ்ரேஷன்மாஸ்றராகச் சேவைபுரிந்த எனது அருமைப்பத்தாவும், எமது பிரியபிதாவுமான திரு. சீமாம்பிள்ளை ஆரோக்கியநாதர் இவ்வுலகை விட்டுமறைந்த 15-ம் வருடம் 1962-ம் ஆண்டு பங்குனிமாதம் 6-ந்திகதி செவ்வாய்க்கிழமை ஆதலால் 5-ந்திகதி திங்கட்கிழமை காலை இவரின் ஆத்தும இளைப்பாற்றிக்காக மாதகல், அர்ச். தொம்மையப்பர்கோவிலில் ஓர் திருக்கப்பாடற்பூசை நிறைவேறும். இதைக் கண்ணுறும் கிறீஸ்தவர்கள் இவரின் ஆத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளுமாறு தயவாக வேண்டுகின்றோம்.

மனைவி: ஆ. மரியநாயகி

மக்கள்: ஆ. இம்மனுவேல் (டக்றர்)
ஆ. நவரட்ணராஜ், ஆ. இக்னேசஸ்.

### கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 3651

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

2-ம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம்
1 சு. சுப்பிரமணியம்
2. மனைவி பொன்னம்மா
இருவரும் — வழக்காளிகள்
எதிராக, டேவிற்றோட்
காலஞ்சென்ற
1. இ. அந்தோனிப்பிள்ளை
2. மனைவி மரிகிறுதா
3. சு. திருச்செல்வம்
Bankshall Street
4. J. F. சிக்மறிங்கம்
மனைவி திரேசா
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 3651-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஆதனம் 1962-ம் ஆண்டு பங்குனிமீ 14-ங்வ (14-3-62) புதன் கிழமை பிற்பகல் 2மணிதொடக்கம் அந்தக்காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 1,866, சதம்66. 27-9-60 தொடக்கம், 28-4-61 வரைக்கும் ரூபா 1,000-த்துக்குப் 12%வட்டியும், அதன்பின் கூடிய முழுத்தொகைக்கும்5%வட்டியும் கொடுக்கும்வரையும் இறுக்கவேண்டும். இதில் ரூபா 500கழிவு.

**காணி விபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் வடமாகாணம் சுண்டிக்குளி கோயிற்பற்று, கரையூர்இறை "பூசன் சுடுகட்டுப் புலம்" என்னும்காணி நில. பர. 2. இதில் வீடும், கிணறும், செய்பயிர் வான்பயிரும், வேறு தாவுய்உண்டான பயிரும். எல்லை: கிழக்கு — றோட்டு. வடக்கு — மிக்கேல் மீனாட்சியும், பங்காளரும். மேற்கு — ஞானப்பிரகாசத்தின் மனைவி எலிசபெத்தும். தெற்கு — செபஸ்தியின் உரித்தாளரும்.

இ. கனகரத்தினம்,
கோமிஷனரும், விலைமதிப்பாளரும்.
நம். 35, கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### பங்குனி மாதம் — 1962

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | ஞா. | 2 | **பஞ்சிகை ஞாயிறு** (வி. ம.) | ஊ |
| 5 | தி. | | காலதினம் (ஞாயிறு பூசை) | ஊ |
| 6 | செ. | | அர்ச். பேர்ப்பெத்துவா அம்மாள், பாக்கியம்மாள் | ஓ |
| 7 | பு. | 1 ஒ. | **விபூதிப் புதன்** | ஊ |
| 8 | வி. | | காலதினம் (அர்ச். தேவ அருளப்பர் ஞா.) | ஊ |
| 9 | வெ. | | காலதினம் (அர்ச். பிரான்சீஸ்கம்மாள் ஞா.) | ஊ |
| 10 | சனி | | காலதினம் | ஊ |

சத்திய வேத

பாதுகாவலன்

1962-ம் ஆண்டு
பங்குனிமாதம் 4-ந் திகதி

## சூசையப்பரிடம் போவோம்

அன்று எகிப்திலே பயங்கரமான ஒருபஞ்சம் உண்டானபோது மக்கள் தாயைத்தேடியோடும் குழந்தைகளைப்போன்று தன்னிடம்ஓடிவந்த பிரசைகளைநோக்கிச் "சூசையப்பரிடம் போங்கள்"எனப் பார்வோன் அரசன் பகர்ந்தான். தான் அரசனயிருந்தபோதிலும் தனது அதிகாரம் முழுவதையும் சூசையப்பருக்கு அளித்து, அவரைப் பெரிதும்சங்கித்து, "எனது இராச்சியத்தில் அதிகாரம்செலுத்தும்படியாக அவரை நியமித்திருக்கிறேன்; எகிப்துஇராச்சியம் முழுவதிலும் அவருடையஉத்தரவில்லாது எவனும் கையையாவது, காலையாவது அசையாதிருக்கக்கடவான்"என்று தனது இராசமகிமைவிளங்கப் பகரலாயினன். அக்காலத்திலே பார்வோன் தனது பிரசைகளின் அபயக்குரலுக்குச் செவிசாய்த்துக் கூறியமொழியை இக்காலத்திலே நம்முடையதாயாகிய சத்தியதிருச்சபை தனதுஞானமேய்ப்பர்களின்வழியாய்ச் "சூசையப்பரிடம் போங்கள்"என்று நமக்குச் சாற்றும்போது, இஃது எகிப்திலே பிரபல்யம்பெற்றிருந்து, பஞ்சத்தால்வாடிய மக்களுக்குத் தானியங்கள்கொடுத்து அவர்களைப் பாதுகாத்துவைத்த பிதாப்பிதாவாகிய யாக்கோப்பின் பன்னிருகுமாரர்களில்ஒருவரான சூசையப்பரிடமல்ல, ஆனல்,பரிசுத்தகன்னிமரியாயின் விரத்தபத்தாவும், தேவசுதனின் திருக்கைத்தாதையுமான அர்ச். சூசையப்பரிடம்தான் போகும்படியாக நம்மைத் தூண்டுகின்றது. ஏனெனில், இவர் தமதுசெல்வாக்கிலும், வல்லபமாதியாம் சகலவரங்களிலுமே பார்வோன்காலப் பழைய சூசையப்பருக்கு நிகரற்றவர். ஏனெனில், உலகில் மானிடராகப்பிறந்த ஆடவர்களிலே நமதுதெய்வீகஇரட்சகராகிய யேசுக்கிறிஸ்துநாதருக்குப்பின் இவரைப்போல மகிமை பெருமை, பாக்கியசலாக்கியம் பெற்றவர் எவருமேஇல்லை.

திவ்விய யேசுவுக்கும், அவரது திருத்தாயாருக்கும் அடுத்தபடியாக மனுமக்களில் முதன்மைஸ்தானம் வகிக்கின்ருர் அர்ச். சூசையப்பர். அக்காலத்தில் மோயீசன் சருவேசுரனேடு பன்முறை சம்பாஷித்தார். தனதுகரத்தண்டால் செங்கடலைப் பிளந்து இசிறவேலர் தப்பிச்செல்ல வழிதிறந்தார். யோசுவா சூரியனையும், சந்திரனையும் தனதுஆணைக்குப் பணியச்செய்தார். நோவே சலப்பிரளயத்திலிருந்து பலஉயிர்களைத் தனதுபேழையில் காத்துவைத்தார். ஆனல், அர்ச். சூசையப்பரோ தேவனும், மனிதனுமாகிய திவ்வியயேசுவுடனே பன்முறை சம்பாஷித்து, அவரோடு அன்னியோன்னியமாகச் சீவித்து, அவரை வளர்த்து வந்தார். சூரியனை அல்ல, நீதியின்சூரியனுகிய யேசுவையும், சந்திரனை அல்ல, சந்திரனிலும் காந்திமிக்க கன்னித்தாயாரையும் தமதுஅதிகாரத்தில் கொண்டிருந்தார். பல உயிர்களை அல்ல, உயிர்களுக்கு உயிரளிக்கும் உலகஇரட்சகரையே ஏரோதனின் கையினின்று காப்பாற்றிவைத்தார். அன்று, நசரேத்தூரில் 'அப்பா' என்று தமது மழலைச்சொல்லால் அவரை மகிழச்செய்த திவ்வியயேசு இன்று வானுலகில் தமது 'அப்பா' கேட்பதை அல்லத்தட்டுவாரா? அன்றேல், பரலோகபூலோக அரசியானவர் தமதுபரிசுத்தபத்தா ஆசித்துக் கேட்பதை இல்லையென்னுவாரா? "நீங்கள் என்னேடு பன்னிரு சிம்மாசனங்களில் வீற்றிருப்பீர்கள்" என்று தமது அப்போஸ்தலர்களுக்குத் திருவாய்மலர்ந்த திவ்வியயேசு அவர்களைக்காட்டிலும் தம்மைஅதிகமாய் நேசித்துப் போஷித்துப் பரிபாலித்துப் பரமபிதாவின் சித்தத்தை நிறைவேற்றிய தமது திருக்கைத்தாதையை அவர்களுக்குமேலாக எத்துணைபெரும் மகிமைச்சிம்மாசனத்தில் வீற்றிருக்கச் செய்திருப்பாரென்று கூறவும்வேண்டுமா? அதோ! வானகத்தில் அத்திருமாதவன் எழுந்தருளியிருக்கும் மகிமைப் பிரதாபம்வாய்ந்த சிம்மாசனத்தை ஞானக்கண்ணால் உற்றுநோக்குந்தோறும் அவரின் பக்தகோடிகள் எத்துணை பெரும்ஆனந்தபரவசம் கொள்வார்களென்று சொல்லவும் வேண்டுமா?

மகாவல்லபமும், செல்வாக்கும், செல்வமும்படைத்த மன்னாதிமன்னர்களும், மகுடாதிபர்களும் இருந்தபோதிலும் தேவசுதனின் திருகைத்தாதையாயும், அவரது திருத்தாயாரின் பரிசுத்தபத்தாவாகவும் அர்ச். சூசையப்பர் தெரியப்பெற்றபோதே அவரின் மகிமையையும், மகத்துவத்தையும் கிரகித்துணரவும், வர்ணித்துரைக்கவும் எவரால் இயலும்? தமதிரீத்துவத்தின் பாவனையான திருக்குடும்பத்தை ஞானத்துடனும், விவேகத்துடனும் ஆண்டுநடத்தியவரும், பிதாப்பிதாக்களின் மகிமைப் பிரதாபமும், தொழிலாளரின் அரிய மாதிரிகையும், வறியவர்களின் மதுர சஞ்சீவியும், நன்மரண சகாயரும், குடும்பங்களுக்குத் தாபரமும், திருச்சபையின் பாதுகாவலரும்,— விசேஷமாய் "இலங்கையின் இரட்சாபிதா"வுமாகிய அர்ச். சூசையப்பரின் வணக்கமாதமாகிய பங்குனிமாதமானது எம்நாடு அமைதியற்றுக் கலக்கமுற்றிருக்கின்ற ஒருசந்தர்ப்பத்திலே பிறந்திருக்கின்றது. அதனல், அவருடையமத்தியஸ்தம் இந்தவேளை நமக்கு அத்தியாவசியகம் வேண்டியிருக்கிறது. ஆகவே, அவரிடம்போவோம். சரணமென்று அவர் சரணடைவோம். இருகரமெடுத்து, கண்ணீர்உகுத்து அபயமிடுவோம். துன்புகஸ்தியாலே சோபித்துத் தம்மைஅண்டினேரையும், சஞ்சலமுற்றுத் தஞ்சமென்றடைந்தோரையும் அஞ்சேலென்று ஆதரவளித்துப் பாதுகாத்துவைக்கும் அரியதந்தைஅவர். நம்பினேரைக்கைவிட்டறியாத அம்பரன்கைத்தாதை அவர். "அர்ச். சூசையப்பரை நான்மன்ருடிக் கேட்டவைகளில் ஒன்றையாவது அவர்மறுத்ததாக எனக்கு ஞாபகமில்லை"யென்று அர்ச். தெரேசம்மாள் அனுபவத்தில் கண்டு கூறுகின்ருள். ஆகவே, நம்பிக்கையுடன் அவர்பாதங்களை அண்டிப்போவோம். அவரது பங்குனிவணக்கமாதத்தை பன்மடங்கு பக்திவேகத்துடன் ஆசரிப்போம்! அவர்சலு [illegible] ஆசிக்கும்வரங்களை [illegible] அடைந்துகொள்வோம்!

## பஞ்சிகை ஞாயிறு

—வண. மைக்கல் ரொட்ரிக்கோ சுவாமிகள்—
தமிழாக்கம்: தமிழ்க் கழகம், லங்காமாதா குருமடம், கண்டி.

**இன்றைய பூசையின் சாரம்:**

வரப்போகும் தபசுகாலத்திற்கு ஆயத்தகாலமாகிய இக்காலத்தில் எமது மனத்திரையில் பலதரப்பட்ட எண்ணங்கள் தோன்றிமறையும். இவ்வெண்ணங்கள் தபசுகாலத்தின்காட்சிகளை எமக்கு நினைவூட்டுவதுடன், இவைகளின் கடைசிஇரவில் நடைபெறும் பாஸ்காத் திருச்சடங்கு எமது மனதிலுள்ள அச்சத்தைப் போக்கவல்லது. ஏனெனில், பாஸ்காத்திரியானது எமது ஆண்டவரின் மகிமைஉத்தானத்தைக் குறிக்கிறது. இன்று நாம் எமதுமனங்களில் "ஆண்டவரின் திருப்பாடுகளை........ அன்பின் அழைப்பை" நினைவுகூர்வோமாக!

கிறிஸ்துநாதர் சாத்தானை முற்ருக ஜெயம்கொண்டதே அவரின் மகிமைப் பிரதாப வெற்றியாகும். சாத்தான் எம்மைச் சிங்காரத்தோட்டத்தில் ஏமாற்றினன். ஆனல், கிறிஸ்துநாதர் ஜெத்ஸமனித்தோட்டத்தில்பட்ட தாங்கொணு அவஸ்தையினல் எம்மைமீட்டார். முதல் தோட்டக்காரனுகிய "ஆதாம்" தனதுகடமையில் தவறிவிட்டார் இரண்டாம் "ஆதாமாகிய கிறிஸ்துநாதர்" சாவில்நின்று உயிர்த்தெழுந்து எமது இரட்சணியத்தின் மறுதோட்டக்காரன் ஆனர். ஏனென்ருல் கல்லறைக்குப்போன "மரியமதலேன்" உயிர்த்தெழுந்த யேசுவை, தோட்டக்காரன்என விளங்கிக்கொண்டாள். எமது பாவவீழ்ச்சியானது, நன்மைதீமையின் அறிவைக் கொடுக்கும் மரத்தினல் உண்டானது. கிறிஸ்து இப்பாவஅக்கிரம வீழ்ச்சியில் நின்று எம்மைமீட்க, ஒருமரத்திலேயே மரணித்தார். தமதுவாழ்வின் இறுதிக்கட்டமான சிலுவைமரணத்தினல் சாத்தான்மேல் மகிமைப்பிரதாபத்துடன் வெற்றிவாகை சூடினர். இவ்வெற்றியானது எம்மெல்லோருக்கும் ஓர் அன்பின் அழைப்பை விடுகின்றது. அவரது துன்பங்களும், மரணமும் எம்மைச் சைகைசெய்து அழைக்கின்றன. யேசுநாதர் "எமது அன்பர்" சிலுவையில் அறையப்பட்டார்என்பதே இந்த அன்பின் அழைப்பு. சிலுவையின் மறுபுறம் ஞானஸ்நானம் பெற்றநாம் அவரோடு அறையப்படுவதற்காக விட்டு வைக்கப் பட்டுள்ளது.

### செபமும் போதகமும்

எமதுபலிக்கு இன்றைய பிரவேச வாக்கியமாக 30-வது சங்கீதம் எடுக்கப்பட்டுள்ளது. இதில் "தேவனே, நீரே எமது அடைக்கலமாகவும், எம்மைக் காப்பாற்றுகிறவராகவும் இருந்தருளும்." எமது பாவத்தினல் நாம் இருளில் அமிழ்ந்தினதைக் கடந்தஇரு ஞாயிறுகளிலும் எடுத்துரைக்கப்பட்டிருந்தது. ஆகையால் இக்கிழமையில் நாம் "எம்தேவனே எம்மைக்காப்பாற்றும், வழிநடத்தும், போஷித்தருளும், விடுதலையாக்கித் தப்புவித்தருளும்" என்னும் சொற்களால் ஆண்டவரின் கோபத்தில்நின்றும் எம்மை மறைத்துக் கொள்ளுகிறேம். "சபைச்செபம்" தேவனுகிய யேசு எம்மைச் சகல பாவங்களிலும் நின்று விடுவித்தருள நாம் வேண்டிக்கொள்ளத் தூண்டுகிறது. நாம் விரும்புவது எமதுவாழ்க்கையில் ஓர் முழுமாற்றமே! தேவன் நமது பாவநாட்டங்களை அறவே ஒழித்து, எம்மைத் தமது அன்பினல் தம்முடன் இணைப்பதையே, நாம்விரும்பும் ஒரே ஆவலாய் இருக்கின்றது.

புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு வரைந்த "நிருபத்தில்" கிறிஸ்துவ பிறசிநேகத்தைக்குறித்து அவர்பாடிய பேர்போன புகழ்மாலையில் கடவுளுடைய சாயலானவர்களும், கிறிஸ்துவினுடைய அவயவங்களானவர்களுமான மனிதரிடையே எவ்வித அன்பு இருக்க வேண்டும்என எமக்குக் காட்டப்படுகின்றது. நாம் கண்ணால்காணும் சகோதரனில் அன்புகொள்ளாமல், காணுத சருவேசுரனிடத்தில் எப்படி அன்புகொள்ளுவோம்? நாம் மலையைப் பெயர்க்கக்கூடிய விசுவாசத்தைக் கொண்டிருந்தாலும்சரி, எல்லா வேத சாஸ்திரங்களை அறிந்திருந்தாலும்சரி எம்உள்ளத்திலே சுவாலைவிட்டெரியும் அன்பு இல்லாவிடில் நாம் பயனற்றவர்கள். கிறிஸ்துவ பிறசிநேகமானது பொறுமையுள்ளது, தயவுள்ளது. ஆனல், இவைகளிலும்பார்க்கத் தேவசிநேகமே மகாபெரியது. இத்தேவசிநேகமானகொடை மேலோகத்திலிருந்தே நமக்குக் கொடுக்கப்படுகின்றது. இக்கொடையைநாம் எம்மில் உண்மையாகக் கொண்டுள்ளோமானல் எளியவர்களுக்கு உதவிசெய்வது எமது சரீரத்தைத் தேவனுக்காகச் சுட்டெரிக்கக் கையளிப்பதுஎல்லாம் எப்பேர்ப்பட்டவை என்பதை நாம்வெகுகெதியில் அறியமுடியும். "அன்பே கடவுள்" என்றே அர்ச். அருளப்பர் கடவுளின் தன்மைக்கு விளக்கம்கொடுத்தார். இந்த அன்புதான் கிறிஸ்துவைச் சிலுவையை அரவணைக்கச்செய்ததுமல்லாமல், தமது உயிரையும் எமக்காக அர்ப்பணிக்கச் செய்தது. இத்தியாகத்தினால்அவர் எமது அயலாருக்காக நாம் எமது வாழ்க்கையை எப்படி அர்ப்பணிக்க முடியும்எனக் காட்டியுள்ளார். மேற்கூறிய மறைவான உண்மையைத்தான் இன்றைய "சுவிசேஷம்" கொண்டிருக்கிறது. நாம்அதை மறைந்த உண்மையென்று கூறுவது ஏனெனில், உள்ளத்திலே ஞானஒளியுள்ள மக்கள்தான் இந்தஉண்மையைச் சுவிசேஷத்தில்வாசித்து அறியமுடியும். இன்றைய சுவிசேஷத்தில் நாம் காணும்பலஉண்மைகளைத் தபசுகாலத்தில் நடந்தேறவிருக்கும் திருவழிபாட்டுச் சடங்குகளிலிருந்து நாம் அறிந்து கொள்ளமுடியும்.

### தெய்வீக விருந்து

உபதேசம் கேட்போரின்பாகம் முடிவடைந்தது. ஞானஉபதேசச் சடங்கும் வெகுநேர்த்தியாக முடிவடைந்ததும், கிறிஸ்துநாதர் தமது விசுவாசிகளுக்கு ஆழமான அன்பை இந்தத் தெய்வீகவிருந்துப் பகுதியில் காட்டுகிருர். அவர் தமது வாழ்க்கையைத் தெய்வீக மறைமுகமாக எமக்கு அர்ப்பணிக்கிருர். இதை எமக்குக் காண்பிப்பதற்கு எம்மைஅழைக்கிருர். அவர் எங்களை ஞானஸ்நானத்தின் மூலமாக முன்பு அழைத்திருக்கிருர். "நான் பூமியினின்று உயர்த்தப்படுவேனுகில்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

## 7-3-62 விபூதிப்புதன்

### ஒருசந்தி—மாமிசத் தவிர்ப்புநாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2-ம் வத்திக்கான் பொதுச்சங்கம்

றெஜினல்ட் ஆபிரகாம். ஓ. எம். ஐ.

## 5

### பொதுச்சங்கத்தில் கிறிஸ்தவ பொதுமக்கள் வகிக்குமிடம்

பொதுச்சங்கத்தில் மேற்றிராணிமார்கள், வேதசாஸ்திரிகள் பாப்புவுடன் ஒன்றுசேர்ந்து கலந்தாலோசிப்பர் என்று நாம் மேலே கூறிய பொழுது கிறிஸ்தவபொதுமக்கள் திருச்சங்கத்தில் பங்குபற்றமாட்டார்கள், பங்குபற்ற முடியாது எனமுடிவுகட்டுதல் மிகவும் பெரிய தவருகும். விசுவாசிகள் திருச்சபையின் நாளாந்தசீவியத்திலேயே வெகுமுக்கிய இடத்தைப் பெறுகின்றனர். ஏனெனில், விசுவாசிகளே திருச்சபையை உண்டுபண்ணுகிருர்கள். விசுவாசிகள் இல்லையேல் பாப்புவும், மேற்றிராணிமார்களும் தேவையில்லை; அவர்கள் சங்கம்கூடவும் வேண்டியதில்லை.

பாப்பு, மேற்றிராணிமார்களுடன் ஓர் பொதுச்சங்கத்துக்காக ஒன்றுசேரும்பொழுது விசுவாசிகள் பொதுச்சங்கத்தில் வகிக்கும்இடம் எவ்விதத்திலும் மாறுபாடானதல்ல. திருச்சங்கத்தில் கிறிஸ்தவபொதுமக்கள் இருவிதமாகப் பங்குபற்றலாம். முதலாவதாக: அவர்கள் தாமாகவே சமுகம்அளிக்க முடியும். தற்போது திருச்சபையானது கத்தோலிக்க சர்வகலாசாலைகள்,ஸ்தாபனங்கள் இவற்றின் தலைவர்களை விசேஷவிதமாய் அழைத்திருக்கின்றது. இத்தலைவர்களும் மேற்றிராணிமார்களைப்போல் அதிகாரபூர்வமாகப் பொதுச்சங்கத்தில் பங்குபற்றுவர். மற்றவர்களைப்போல் தங்கள்விருப்பத்தை எடுத்துரைக்க முழுச்சுதந்திரமுள்ளவர்கள். விசேஷவிதமாக அழைக்கப்படாதவர்கள் யாராவது போகவிரும்புவார்களாகில் அவர்களும் சமுகமளிக்கமுடியும். ஆனல், அவர்கள் எவ்வித தர்க்கத்திலும் ஈடுபடாமல் பார்வையாளர்களாக மட்டுமே சமுகமளிக்கலாம். இரண்டாவதாக: கிறிஸ்தவபொதுமக்கள் தங்கள் மேற்றிராணிமார்களைத் தங்களுக்காகச் சமுகம் அளிக்கும்படி அனுப்பிவைத்தல்.

“பூலோகத்தில் நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும். பூலோகத்தில் எவைகளைக் கட்டவிழ்ப்பீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்” என்று நமது திருச்சபையின் ஸ்தாபகரான யேசுக்கிறீஸ்துநாதர் அப்போஸ்தலர்களுக்கு அளித்த அதிகாரம், இன்று நம்மைஆண்டுவரும் மாதாவாகிய திருச்சபையின் கையிலிருக்கின்றது. திருச்சபையினிடமிருந்து அதிகாரத்தைப்பெற்றுலொழிய, கத்தோலிக்கனெவன்தானும் தான் விரும்பியபடி வேதத்தைப்போதிக்க முடியாது. இதன்பொருட்டே யேசுக்கிறீஸ்துநாதர் இராயப்பரைத் திருச்சபைக்குத் தலைவராக நியமனஞ்செய்தார். ஆகவே, இன்று திருச்சபையின் சட்டங்களைக் காலத்திற்கேற்ப மாற்றியமைக்க, பொதுமக்களின் பிரதிநிதிகளாகிய மேற்றிராணிமார்களுடன் திருச்சபையின் தலைவராகிய பாப்பு ஒன்றுகூடுவார்.

திருச்சங்கத்தில் பங்குபற்ற நாம்ஒவ்வொருவரும் விசேஷவிதமாக அழைக்கப்படமாட்டோம். நாம் ஒவ்வொருவரும் திருச்சங்கத்தில் பார்வையாளர்களாகச் சமுகமளிப்பதும் சுலபமான காரியமல்ல. இந்நிலையில் ஒவ்வொரு கத்தோலிக்கனும் எப்படித்தன்னுலான உதவியை அளிக்கமுடியும்? என்ற கேள்வி எழுகின்றது. ஆம், திருச்சங்கத்திற்குச் சமுகம்அளிக்கச் சந்தர்ப்பம் கிடையாதவர்கள் கைகளிலுங்கூட எல்லாவற்றிலும்மேலான ஓர்ஆயுதத்தைத் தேவன்கொடுத்திருக்கிருர். அதாவது: “செபம்.” செபம் எவ்வளவு வல்லமையுள்ளது என்பதை நாம்இங்கு விளக்கிக்காட்டத் தேவையில்லை. வரப்போகும் பொதுச்சங்கமானது மிகவும் சித்திபெறவேண்டுமென நாளாந்தம் செபிக்கவும், எமது ஞானக்கிருத்தியங்களை அதற்காகஒப்புக்கொடுக்கவும் நாம் மிகவும் கடமைப்பட்டிருக்கின்ருேம்.

அறியாத ஒருபொருளையும் மனிதன் விரும்பமாட்டான், நேசிக்கமாட்டான். ஒருபொருளையோ, ஆளையோ, இடத்தையோ முன்அறிந்திருந்தால்மட்டுமே அதற்காக ஒருவன் தனது அன்பைக் காட்டமுடியும். எவ்வளவிற்கு அறிந்திருப்பானே அவ்வளவிற்கே நேசிப்பான். ஆகவே, யேசுக்கிறீஸ்துநாதருடைய ஞானசரீரத்திலுள்ள விசுவாசிகளாகிய நாம் அதன் வளர்ச்சிக்காக ஒத்துழைக்கக் கடமைப்பட்டிருப்பதால், அதனை நன்குஅறிந்திருத்தல் அத்தியாவசியம். ஒவ்வொரு கத்தோலிக்கனும் தனது நாளாந்தசம்பாஷணைகளில் திருச்சங்கத்தைப்பற்றிக் கூடிப் பேசவேண்டும். பத்திரிகைகளிலுமிருந்து, புத்தகங்களிலுமிருந்து திருச்சங்கத்தைப்பற்றி எவ்வளவுஅறியச் சந்தர்ப்பம் கிடைக்கிறதோ அவ்வளவிற்கு அறியப் பிரயாசைப்படவேண்டும். ஏனெனில், எவ்வளவிற்கு அறிவானே அவ்வளவிற்குத் திருச்சபையையும், அதன் கருமங்களையும் நேசிப்பான்; அதனல் அதற்குவேண்டிய உதவியை என்றும்அளிக்கத் தயாராகஇருப்பான்.

## 2-ம் வத்திக்கான் திருச்சங்கத்தின் சித்திக்காகச் செபம்

திவ்விய இஸ்பிரீத்துசாந்துவே! உமது பிரசன்னத்திலுைம், உறுதியான வழிநடத்துதலினுலும் திருச்சபையோடு என்றுமிருக்கும்படி யேசுவின் நாமத்தினுல் பரமபிதாவினுல் அனுப்பப்பட்டவரே! திருச்சபையின் பொதுச்சங்கத்தின்மேல் உமது நிறைவான வரங்களைப் பொழிந்தருளும்படி தேவரீரை இரந்து மன்ருடுகிருேம்.

எமது மதுரமான ஆறுதலும், ஆசிரியருமானவரே! பரிசுத்த பாப்பரசரின் அழைப்புக்கிணங்கி உரோமாபுரியில் திருச்சங்கங்கூட மகிழ்ச்சியுடன் வந்துசேரும் ஆயர்களின் மனதுகளை உமது தெய்விக பிரகாசத்தால் நிரப்பியருளும்.

இத்திருச்சங்கத்தின் விளைவாகச் சுவிசேஷத்தின் ஒளியும், பலமும் உலகமக்களிடையே அதிகமதிகமாய்ப் பரவவும், கத்தோலிக்கவேதமும் அதைப்பரப்பும் பணியும் இனிதே வளம்பெறவும், திருச்சபையின் போதனையும், நல்லொழுக்க வழிகாட்டுதலும் எல்லோராலும் பூரணமாய் ஒப்புக்கொள்ளப்படவும் வேண்டுமென்று தேவரீரை மன்ருடுகிருேம்.

எமது ஆத்துமத்தின் மதுரமான வழிகாட்டியே! நாங்கள் மனத்தாழ்ச்சியும், அமைச்சலும் உள்ளவர்களாயிருக்கவும் திருச்சங்கத்தின் முடிவுகளை நன்றிநிறைந்த மனதுடன் ஏற்று, அனுசரிக்க ஆசைப்படவும் எங்கள் மனதைச் சத்தியத்தில் உறுதிப்படுத்தியருளும்.

கிறிஸ்துநாதருடைய பெயரில் பெருமை பாராட்டிக்கொண்டு அவரால் நிறுவப்பட்ட ஏகமந்தையைவிட்டு இன்னும் பிரிந்து நிற்பவர்கள் கடைசியாய் ஒரே மேய்ப்பனின்கீழ் ஒற்றுமையைக் கண்டடையச் செய்தருளும்படி மன்ருடுகிருேம்.

முன்னொருநாள் பெந்தெக்கோஸ்துதினத்தில் தேவரீர் புரிந்த அற்புதங்களை எங்கள் காலத்திலும் இன்னொருமுறை செய்தருளும்படி கெஞ்சி மன்ருடுகிருேம். உமது திருச்சபை யேசுநாதருடைய தாயாரான பரிசுத்த கன்னிமரியம்மாளுடன் தளராத வேண்டுதலில் ஒன்றித்திருப்பதாலும், அர்ச். இராயப்பரின் வழிகாட்டுதலைப் பின்பற்றுவதாலும், எமது திவ்விய இரட்சகரின் இராச்சியம்—உண்மையினும், நீதியினும் அன்பினும் சமாதானத்தினும் இராச்சியம்—உலகெங்கும் பரவச்செய்தருளும் சுவாமி, ஆமென்யேசு.

குறிப்பு: இச்செபத்தைப் பத்தியுடன் செபிப்போர் அடையக்கூடிய பலன்களாவன:

1. பத்துவருட அபூரணபலன். (ஒவ்வொரு முறையும்)
2. நாள்தோறும் ஒருமாதமளவாகச் செபித்தால் (வழமையான நிபந்தனைகளுக்கிணங்க) ஒரு பரிபூரணபலன்.

# பேசும் பேனு

### ஈழத்துக்கு முதலிடம்

ஐ. நா. சபையினரின் சென்றவருடத்துக்கான புள்ளிவிபர அறிக்கையொன்றில் ஒரு தலைப்பில் முன்னணியிற் நிற்கும் நாடுகளில் இலங்கையும் ஒன்றென்பது தெரியவருகின்றது. அத்தலைப்பு என்ன தெரியுமா? தற்கொலை. வாழ்க்கையின் ஓரத்துக்கு இழுத்துச்செல்லப்பட்ட ஆன்மா தன்னம்பிக்கையீனத்தால் அவமானத்தைச் சகிக்கவியலாது தற்கொலை செய்துகொள்கின்றது. வறுமைகாரணமாக தற்கொலை செய்வோர் இலங்கையில் சொற்பம். காதல் விவகாரத்தில் ஏற்பட்ட மனமடிவே பெரும்பாலானேரை சிறப்பாக இளநங்கைகளை தற்கொலைப்பாதைக்கு இழுத்துச் செல்கின்றது.

இன்றைய நாகரீகம் இளைஞர்களையும் நங்கைகளையும் விரைவில் ஒன்றுசேர்த்துவிடுகிறது. ஆபாச இலக்கியங்களில்தாம் கற்றவற்றைச் செயலிலும் காட்டிவிடுகின்றனர் இளவல்கள். முடிவு? காதல் இன்றேல் சாதல். இந்த அவலநிலைக்கு முக்கியகாரணமாக வெளிநாடுகளில் தயாரிக்கப்பட்டு இங்குவிஜயஞ்செய்யும் ஆபாச திரைப்படங்கள், அரைநிர்வாண சஞ்சிகைகள் என்பன விளங்குகின்றன. இந்நிலை மாற்றமடையவேண்டில் வயதுவந்தவர்கட்கு என்ற கபடநாடகத்துடன் இளைஞர்களும் அனுபவிக்க வாய்ப்பளிக்கும் திரைப்படங்கள் இலங்கையில் காட்சியிடுதல் தவிர்க்கப்படுதல் வேண்டும். ஆரோக்கியம் என்றபெயரால் உடற்கூறுகளைப்பச்சையாக கண்கவர் வர்ணப்படங்களில் தாங்கிவரும் பிறநாட்டுச்சஞ்சிகைகட்குத் தடையிடப்படல் அவசியம்.

### கனியிருப்ப காய்கவர்தல்

அச்சகங்கள் தொடங்கிய காலத்திலிருந்தே புத்தகங்கள், பத்திரிகைகள் பிரசுரிக்கப்பட்டுவருகின்றன. ஆயின் இன்றுபோல் ஏராளமாக எக்காலத்திலும் வெளிவந்ததில்லை. நாளுக்கொரு எழுத்தாளனும் வேளைக்கொரு நூலுமாகக் காட்சிதரும் காலம் இது. புத்தகசாலைகளில் குவிந்துகிடக்கும் ஆயிரக்கணக்கான சஞ்சிகைகளில் தம் அறிவுப்பசியைத்தீர்க்கவல்ல உயர்ந்த இலக்கியங்களை வாங்கும் திறமையை நம் இளைஞர்க்கு கற்றுக்கொடுத்தல் அவசியம்.

மலிவான விலையில் நல்லதமிழ்நடையில் சிந்தனைக்கு விருந்தளிக்கும் எழுத்தோவியங்களைத்தாங்கிவரும் ஏராளமான சஞ்சிகைகள் ஒருபுறமிருக்க, அரியகட்டுரைகளையும், வர்ணப்படங்களையும் பொதிந்த சிறந்த ஆங்கில ஏடுகள் மறுபுறமிருக்க, ஆங்கிலஅழகிகளின் அலங்கோல நிலைகளை எடுத்தோதும் சஞ்சிகையொன்றைத் தெரிந்தெடுத்து 8ரூபா 50சதம் கொடுத்து வாங்கிச்சென்ற ஒரு இளைஞனின் மதிகெட்ட செயலை அண்மையில் யாழ் நகர்ப்புத்தகசாலையொன்றில் காணநேர்ந்தது. புத்தகங்கள் சஞ்சிகைகள் சம்பந்தமாக நமது இளைஞரின் நிலை இச்சம்பவத்தின்மூலம் நன்கு தெரிகின்றதல்லவா?

### உங்களுக்குத் தெரியுமா?

சென்றவாரம் புனிதரொருவரின் வாழ்வில் சுவையான நிகழ்ச்சியொன்றைத் தெரிவித்தேன். இவ்வாரம் மற்றொரு புனிதரது வரலாற்றில் சுவையான நிகழ்ச்சியை அவரது சுயசரிதையிலிருந்து எடுத்துத் தருகிறேன்.

பேட்டிகாண்போர்தொகை அதிகமெனக்கண்ட மூப்புச்சுவாமியார் பாப்பரசருடன் எவருமே உரையாடுதல்கூடாதென விதித்தார். திகிலுடன் சோதரியை நோக்கினேன். தைரியமூட்டினுள் அவள். “முதலில் பரிசுத்த தந்தையின் பாதங்களை வணங்கினேன். பின்னர் கைகளைக்கூப்பியவண்ணம் தந்தையே எனதுவேண்டுகோளுக்குச் செவிசாயுங்கள் எனப்பரிதாபத்துடன் மொழிந்தேன். எனதுவிழிகளிரண்டிலும் நீர்நிரம்பியது. பாப்பரசரோ சிரந்தாழ்த்தி எனது உரையாடலுக்குச் செவிசாய்த்தார். அவரது கரிய நேத்திரங்கள் எனது ஆன்மாவின் அந்தரங்கத்தை எடையிட்டன. பரிசுத்த தந்தையே தங்கள் யூபிலியின் ஞாபகமாக யான் பதினைந்தாவது வயதில் கன்னியர்சபையில்சேர அனுமதியுங்கள்” எனத்துணிவுடன் கூறினேன். திருச்சபையின் தலைவர் விபரமறியும் வண்ணம் மூப்புச்சுவாமியாரை நோக்கினர். “இந்தச்சிறுமி தனது பதினைந்தாவது வயது பூர்த்தியாகுமுன்னர் கார்மேல்சபையில் சேரவிழைகின்ருள். இவ்விடயம் மேலதிகாரிகளின் பரிசீலனையிலிருக்கிறது” என அவர் விளக்கினர். “நல்லது மகளே, மேலதிகாரிகள் கூறுவதுபோல் நடந்துகொள்” என அன்புடன் மொழிந்தார் திருச்சபையின் தலைவர்.

எனது முயற்சிகளனைத்தும் வீணுகியதை உணர்ந்தேன். பேட்டிநேரம் முடிந்ததெனக் காவலர்கள் அடையாளம் காட்டினர். இறுதிநடவடிக்கையொன்றை மேற்கொண்டேன். பாப்பரசரின் முழங்கால்களைக்கட்டிப்பிடித்துக்கொண்டேன். “பரிசுத்த தந்தையே நீங்கள் கூறினல் அவர்கள் மறுக்கமாட்டார்கள்” எனக்கெஞ்சினேன். இரக்கம் நிறைந்த, அன்பு பொதிந்த, ஆயின் உறுதியோடமைந்த வார்த்தைகளால் அவர் பேசினர். “நல்லது பிள்ளாய், தேவன் அதை விரும்பினல் நீ கட்டாயம் கன்னியர்மடத்தில் சேர்வாய்.” “ஒரு சிறுமியால் பாப்புவின் நேரம் வீணடிக்கப்படுவதைக் காவலர்கள் விரும்பவில்லை. இருவர் பலவந்தமாக எனது தோள்களைப்பிடித்து என்னையெழுப்பினர். எனது உதடுகளில் தமதுகரத்தை வைத்தபின் கிறிஸ்துவின் பிரதிநிதி எனக்கு ஆசியளித்தார். விம்மல் பொருமலுடன் யான் வெளியேறியதை அந்த நல்லதந்தை உருக்கத்துடன் உற்றுநோக்கியது என்னுலென்றுமேமறக்கவியலாததொன்று.” இப்புனிதர் யாரென்று உங்களுக்குத் தெரியுமா? அவர்தான் யேசுவின் சிறியபுஷ்பமென்று அழைக்கப்படும் அர்ச். தெரேசம்மாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இளைஞர் பக்கம்

## அர்ச். லூக்காஸ் சுவிசேஷம் —

### வியாக்கியானக் குறிப்புகள்

### I. சுவிசேஷத்தின் முகவுரை — (1 : 1 - 4)

மூன்றாவது சுவிசேஷம் அர்ச். சின்னப்பருடைய பிரமாணிக்க முள்ள சீஷனும், பிரயாணத் தோழனுமாகிய அர்ச். லூக்காஸ் என்பவரால் கி. பி. 62-ம் ஆண்டளவில் எழுதப்பட்டதென்று முன் காட்டப்பட்டது. அர்ச். லூக்காஸ் தமது சுவிசேஷத்தைக் கிரேக்க மொழியில் எழுதினார். அந்தக்காலத்தில் கிரேக்க எழுத்தாளரிடம் நிலவிவந்த வழக்கத்தின்படி அர்ச். லூக்காசும் தமது சுவிசேஷத்திற்கு ஓர் முகவுரை எழுதியுள்ளார். இந்த முகவுரையிலிருந்து அவர் ஓர் சிறந்த கிரேக்க எழுத்தாளனென்று தெரியவருகிறது. இந்த முகவுரையில் யாருக்கு, என்ன நோக்கத்துடன், என்ன மூலக்களங்களை உபயோகித்து, எந்த முறையில் சுவிசேஷம் எழுதப்பட்டதென்று அர்ச். லூக்காஸ் சுருக்கமாகக் குறிப்பிடுகின்றார்.

1—2: "துவக்கமுதல் கண்ணால் கண்டவர்களும், வாக்கியத்தைப் பிரசங்கிக்கிற உத்தியோகமுள்ளவர்களுமாய் இருந்தவர்கள் நமக்குக் கையளித்தபடியே நமதுமத்தியில் நடந்தேறிய விஷயங்களின் வரலாற்றை ஒழுங்குடன் எழுத அநேகர் முயன்றபடியால்"

"துவக்கமுதல்"

ஸ்நாபக அருளப்பர் யேசுநாதருக்கு ஞானஸ்நானம் கொடுத்ததிலிருந்து அவர் பரலோகத்திற்கு எழுந்தருளியதுவரை யேசுநாதர் செய்த சுவிசேஷத்தொண்டைக் கண்ணாரக் கண்டவர்களாகிய (அ. ந. 1:22) அப்போஸ்தலர்கள் சுவிசேஷத்தைப் போதிக்கும் பொறுப்பைப் பெற்றனர் (மத். 28 : 19—20.). அந்தப் பொறுப்பை யேசுநாதர் பரலோகத்துக்கு எழுந்தருளினபின் நிறைவேற்றி வந்தனர். இவர்களுடைய போதகத்தைத்தழுவி யேசுநாதருடைய சீவிய வரலாறு பலரால் எழுதப்பட்டது. அர்ச். மத். கி. பி. 42-ம் ஆண்டளவில் தமது சுவிசேஷத்தை அரமெய்க் மொழியில் எழுதினார். அது விரைவில் கிரேக்க பாஷையில் மொழிபெயர்க்கப்பட்டு, கிறிஸ்தவ சபைகளில் வாசிக்கப்பட்டு வந்தது. அர்ச். லூக்காஸ் தமது சுவிசேஷத்தை எழுதியபொழுது இந்தச் சுவிசேஷத்தை உபயோகித்திருக்க வேண்டும்.

அர்ச். லூக்கா, அர்ச். மாற்குவை நன்றாக் அறிந்திருந்தார். ஏனெனில், இருவரும் அர்ச். சின்னப்பருடைய சீஷர்களாக இருந்தார்கள். பிந்திய காலத்தில் அர்ச். சின்னப்பர் றோமாபுரியில் சிறையிலிருந்தபோது இருவரும் மீண்டும் றோமாபுரியில் சந்தித்தனர். (கொலோ, 4: 10, 14.) அர்ச். மாற்கு தமது சுவிசேஷத்தை அர்ச். இராயப்பருடைய போதகத்தைத் தழுவி றோமாபுரியில் எழுதினார். லூக்காஸ் சுவிசேஷத்தையும், மாற்கு சுவிசேஷத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால் நெருங்கிய தொடர்பைக் காணலாம். ஆகவே, அர்ச். லூக்காஸ் தமது சுவிசேஷத்தை எழுதியபோது மாற்கு சுவிசேஷத்தையும் உபயோகித்திருக்க வேண்டுமென்று சொல்லவேண்டும்.

3—4: "ஆதிமுதல் யாவற்றையும் கவனமாய்க் கற்றுக்கொண்ட நானும்"

யேசுநாதருடைய பாலப்பருவத்தைப்பற்றி முதல் இரண்டு சுவிசேஷங்களிலும் குறிக்கப்படாத அநேக சம்பவங்களை அர்ச். லூக்காஸ் தமது சுவிசேஷத்தில் குறிப்பிட்டுள்ளார். உதாரணம்: ஸ்நாபக அருளப்பருடைய பிறப்பைப்பற்றிய முன்னறிவித்தல், யேசுநாதருடைய பிறப்பைப்பற்றிய முன்னறிவித்தல், கன்னிமரியம்மாள் எலிசபெத்தம்மாளைச் சந்தித்தல், ஸ்நாபக அருளப்பரின் பிறப்பு, யேசுநாதர் தேவாலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டது, பாலக யேசுவின் தேவாலய தரிசனம் முதலியன. இச்சம்பவங்களை அர்ச். லூக்காஸ் யாரிடமிருந்து அறிந்திருக்கக்கூடும்? பரிசுத்த கன்னிமரியம்மாளைத் தவிர வேறெவரும் இச்சம்பவங்களை இத்துணை விரிவாகக் கூறியிருக்க முடியாது. அர்ச். லூக்காஸ் தமது சுவிசேஷத்தை எழுதியபொழுது பரிசுத்த கன்னிமரியம்மாள் இன்னும் உயிரோடு இருந்தமையால் அவவிடமிருந்தே இச்சம்பவங்களை அவர் அறிந்திருக்க வேண்டும். "மரியம்மாள் இந்த வாக்கியங்களை யெல்லாம் தன் இருதயத்தில் வைத்துச் சிந்தித்துக் கொண்டு வருவாள்" (லூக். 2: 19, 51) என்று அர்ச். லூக்காஸ் இருமுறை குறிப்பிட்டிருப்பது இதற்குப் போதிய சான்றாகும்.

அர்ச். லூக்காஸ் தமது சுவிசேஷத்தை அர்ச். சின்னப்பருடைய போதகத்தைத் தழுவி எழுதினார். ஆனால், அவர் யெருசலேம் பட்டணத்தையும் பலஸ்தீன தேசத்தின் மற்றப் பிரதான இடங்களையும் பலமுறை அர்ச். சின்னப்பரோடு தரிசித்தபடியால் அப்போஸ்தலர்களையும் யேசுநாதருடைய மற்றச் சீஷர்களையும் சந்தித்து யேசுநாதருடைய சீவிய வரலாற்றைப்பற்றிப் பல விஷயங்களை அவர்களிடமிருந்து நேராக அறிந்து கொள்ளுகிறதற்கு அவருக்குப் போதிய வசதிகள் இருந்தன. இவ்வாறுபெற்ற வரலாற்றுக் குறிப்புகளை யெல்லாம் ஒன்றாகச் சேர்த்து ஒழுங்குபடுத்தியே அர்ச். லூக்காஸ் தமது சுவிசேஷத்தை எழுதியுள்ளார்.

"உத்தம தேயோபிலே"

'தெயோபிலஸ்' என்பவர் மனம் திரும்பிய ஒரு உயர்குலத்தவர். இவர் அர்ச். லூக்காவின் சுவிசேஷ போதகத்தொண்டின் பயனாக மனந் திரும்பியிருக்க வேண்டும். யேசுக் கிறிஸ்துநாதரைக் குறித்து போதிக்கப்பட்டவைகளின் உண்மையை நன்றாக உணர்ந்து விசுவாசத்தில் உறுதி பெறும்படி அர்ச். லூக்காஸ் தமது சுவிசேஷத்தை அவருக்கு அர்ப்பணித்துள்ளார்.

'தியோபிலஸ்' என்ற சொல்லு கிரேக்க மொழியில் தேவபக்தன் எனப் பொருள்படும். ஆகவே, தேவபக்தர்களான கிறிஸ்தவர்களுக்கே அர்ச். லூக்காஸ் தமது சுவிசேஷத்தை அர்ப்பணித்துள்ளார் என்று ஒரு சில கிறிஸ்தவ எழுத்தாளர் கருதுகின்றனர்.

"ஒழுங்குடன் எழுதுவது"

அர்ச். லூக்காஸ் யேசுநாதருடைய சீவிய சரிதையை மற்ற சுவிசேஷகர்களைப் பார்க்க, கால ஒழுங்கைத்தழுவி விபரித்துள்ளார். இடையிடையே சில முக்கிய சம்பவங்களை றோமை இராட்சியத்தின் சரித்திரத்தோடு பொருத்தித் திட்டமாகக் குறிப்பிடுகின்றார். உதாரணமாக: யூதேயா தேசத்து அரசனாகிய ஏரோதனுடைய காலத்தில் ஸ்நாபக அருளப்பருடைய பிறப்பு அறிவிக்கப்பட்டது (1:5). செசார் அகுஸ்துஸ் றோமை இராட்சியம் முழுவதிலும் குடிக்கணக்கு எடுக்கப்பட வேண்டுமென்று விடுத்த கட்டளை (2:1). திபேரியுஸ் என்னும் றோமைச் சக்கரவர்த்தியுடைய ஆட்சியின் 15-வது வருடத்தில் ஸ்நாபக அருளப்பர் தமது போதகத்தைத் தொடங்கினார், முதலியன.

### 2. கிறிஸ்துநாதருடைய பிறப்பும் குழந்தைப்பருவமும்

(1, 5-ம் வசனம்—2, 52-ம் வசனம்)

| இடம் | சம்பவங்கள் | சுவிசேஷம் |
|---|---|---|
| யெருசலேம் | அர்ச். ஸ்நாபக அருளப்பருடைய பிறப்பு முன்னறிவிக்கப்பட்டது. | 1, 5—25 |
| நசரேத் | அர்ச். கன்னிமரியம்மாளுடைய திருமணம், | 1, 27 |
| ,, | கிறிஸ்துநாதருடைய பிறப்பு முன்னறிவிக்கப் பட்டது. | 1, 26—38 |
| எபுறோன் | அர்ச். கன்னிமரியம்மாள் எலிசபேத்தம்மாளைச் சந்தித்தல். | 1, 39—55 |
| | நசரேத்துக்குத் திரும்புதல். | 1, 56 |
| பெத்லெகம் | கிறிஸ்துநாதருடைய பிறப்பு. | 2, 1—7 |
| ,, | இடையருடைய ஆராதனை. | 2, 8—20 |
| ,, | விருத்தசேதனம். | 2, 21 |
| யெருசலேம் | கிறிஸ்துநாதரைத் தேவாலயத்தில் ஒப்புக்கொடுத்ததும், அர்ச். கன்னிமரியம்மாளைச் சுத்திகரஞ்செய்தலும். | 2, 22—28 |
| நசரேத் | நசரேத்துக்குத் திரும்புதல். | 2, 39 |
| ,, | கிறிஸ்துநாதரின் குழந்தைப்பருவம். | 2, 40 |
| யெருசலேம் | தேவாலயத்தில் கிறிஸ்துநாதர் சாஸ்திரிகளோடு சல்லாபித்தல். | 2, 46—50 |
| நசரேத் | கிறிஸ்துநாதர் தமது பெற்றோருக்குக் கீழ்ப் படிந்து நடத்தல். | 2, 51 |

(தொடரும்)

### 4-ம் வருட மரண ஞாபகம்

"என்னுடையசீவியம் மின்னலைப்போல்
தோன்றி மறைந்தது;
என்சீவியத்தில் என்னைநேசித்தவர்களே
என்மரணத்திலும்
என்னை மறவாதீர்கள்."



பிறப்பு : 11-5-1907    இறப்பு : 10-3-1958

**மதுரயேசுவே! நித்திய இளைப்பாற்றியை எம்.எஸ். பெரேராஅவர்களுக்கு அளித்தருளும் சுவாமி. முடிவில்லாத ஒளி இவருக்குப் பிரகாசிக்கக்கடவது.**

ஒரு பர. பிரி. திரி.

எனது அன்புமிக்க பத்தாவும், எங்கள் அருமைத் தந்தையுமாகிய எம். எஸ். பெரேரா (ஆசிரியர்) அவர்கள் எம்மை மாறாத்துயரத்தில் ஆழ்த்திவிட்டு, அமலவின் பாதஞ்சேர்ந்த 4-ம்ஆண்டு நிறைவு தினம் இம்மாதம் 10-ந்திகதி (10-3-62) பூர்த்தியாகின்றமையால், அன்றுதினம் சிலாபம், கார்மேல்மாதாவின் ஆசனக் கோயிலில் ஓர் துக்கப்பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும். இதனைக் கண்ணுறும் வண. குருப்பிரசாதிகள், சங். சந்நியாசர், கன்னியாஸ்திரிமார்கள், இனசனர், நண்பர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், மற்றும் யாவரும் தங்கள்செபங்களில் இவரை நினைவுகூரும்படி பரிவாய் வேண்டுகின்றோம்.

அருமைப் பத்தாவை இழந்து
பரதவிக்கும்
எம். மாகிறேற் பெரேராவும்
அருமைத் தந்தையை இழந்து துயருறும்
பிள்ளைகளும்


### கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 3880

யாழ்ப்பாணம், திருநெல்வேலி தெற்கு
இராசையா சிவசுப்பிரமணியம்
— வழக்காளி.
எதிராக
யாழ்ப்பாணம், திருநெல்வேலி வடக்கு
பலாலிறோட்
சரவணமுத்து நடராசா
— எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 3880-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்தகோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1962-ம்ஆண்டு சித்திரைமீ 7-ந் திகதி சனிக்கிழமை (7-4-62) முற்பகல் 10மணிதொடக்கம் அந்தக்காணிக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 3,350-உம், 3-2-61 தொடக்கம் 4-9-61 வரைக்கும் ரூபா 2,250-க்குப் 12வீதவட்டியும், அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீதவட்டியும், கோட்டுச்செலவு 294ரூபா 18சதமும். அதாவது முன்செலவு ரூபா 222/31. வெல்லியாத்துச்செலவு ரூபா 44/42. பின்வரக் கூடியசெலவு ரூபா 27/45.

ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி நல்லூர்கோயிற்பற்று கொக்குவில் கிழக்குறிறை "ஆனைவிழுந்தான்" என்னும் காணித்துண்டு முழுதும் நிலப்பரப்பு எட்டும், குளி ஒன்பதரையும் (நி. ப. 8, குளி $9\frac{1}{2}$), கல்வீடும், தெற்கெல்லைக் காணிக்குளிருக்கும் கிணற்றுப்பங்கும், வழிவாய்க்கால் உரித்தும், கையொழுங்கைப்பங்கும். குறித்த நி. ப. 8, குளி $9\frac{1}{2}$-க்கும் எல்லை: கிழக்கு — செல்லப்பா துரைசிங்கத்தின தும் பெண் இரத்தினத்தினதும் ஆதனம். வடக்கு — கார்த்திகேசு முத்துத்தம்பியின் ஆதனம். மேற்கு — வேலுப்பிள்ளை கந்தையாவின் ஆதனம். தெற்கு — ஒழுங்கையும், கையொழுங்கையும். இதடங்கலும், இதற்குச் சேர்ந்தவைகளும். பதிவிலக்கம் D 248/146.

அ. வெற்றிவேலு,
கொமிஷனர்.

இல. 19, வேம்படிவீதி,
யாழ்ப்பாணம், 25-2-62.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்த்தொண்டு இதழ்

# இப்போதுள்ள பழந்தமிழ் இலக்கியங்கள் தோன்றியகாலம்

(வண. ஜி. டேவிற் ஹியசிந் அடிகள், எம். ஏ., பிஎச். டி.)

"பழந்தமிழ்ப் பாடல்களில் இயற்கை" என்ற தமது நூலில் கலாநிதி X. S. தனிநாயகம் அடிகள் சங்க இலக்கியங்களைப்பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: "சங்க இலக்கியங்கள் எனப்படுவன தமிழர்கள் தங்கள் பழந்தமிழ் இலக்கியங்களை—அதாவது கிறிஸ்தவ சகாப்தம் ஆரம்பித்தபின், மூன்றும் நூற்றாண்டிற்குமுன், எழுதப்பட்ட நூல்களைக்—குறிப்பிடும் தொடரெனக் கூறலாம்." (முகவுரை, பக்கம் 14, 1-ம் குறிப்பைப் பார்க்கவும்)

"தமிழ் இலக்கிய வரலாற்றுச் சுருக்கம்" என்ற தமது நூலில் திரு. V. செல்வநாயகம், M. A. அவர்கள், அந்நூலின் ஆரம்பக்கத்தில் பழந்தமிழ் இலக்கியம் கி. பி. நாலாம் நூற்றாண்டுக்குமுன் ஏறக்குறைய மூந்நூறு ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதியைக் கருதும் எனக் கூறிப்போந்தார்.

மேலேகாட்டிய இரு பெரியார்களுடனும் நான் கலந்துரையாடியபோது, அன்னார் தாம் குறிப்பிட்ட காலப்பகுதி முற்றும் சரியெனக் கொள்ளற் பாற்றன்று என்றனர். பழந்தமிழரின் காலவரன் முறை (Chronology of the early Tamils) என்ற நூலில் ஸ்ரீ K. N. சிவராஜாப்பிள்ளையவர்கள் "புறநானூற்றுப் பாடல்களும் பத்துப்பாட்டு என்ற இலக்கியத்தில் வரும் பாடல்களும் கி. மு. ஐம்பதாம் ஆண்டிற்கும், கி. பி. இருநூறும் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தன" என்கின்றார். புறநானூற்றுப்பாடல்களில் சேர சோழ பாண்டிய வம்சாவளி பற்றிக்கூறும் விஷயத்தோடு சம்பந்தமான இக்கூற்றுச் சரியாயினும், இக்காலஎல்லைக்கு முற்பட்ட புறநானூற்றுப் பாடல்களும் உள புறநானூற்றின் 396-ம் பாடலை நோக்குவோமாயின், அதன்கண் மிகப்பழைய வழக்கொழிந்த சொற்களும் வினைமுடிப் பதங்களும் (Verbal Constructions) இருத்தலை நாம் காணலாம். விசேஷமாக "உந்து" எனமுடியும் இடைச்சொற்களோடு கூடியபதங்களை நாம் காண்போம். தமிழின் சகோதரபாஷையாகிய தெலுங்கு படித்தவர் "உந், உந்த, உந்" என்ற இடைச்சொற்களின் பலவித உபயோகம்பற்றி அறிவர். இப்போதுள்ள பழந்தமிழ் நூல்களில் "உந்து" என வழங்கும் இடைச்சொல் "உந்து" என்ற—அதாவது, "உளது" அல்லது "உண்டு" எனும் பொருளுடையதாகிய — திராவிடபதத்தின் முற்றுவினை அல்லது வினையெச்சச் சொல்லாய் அமைந்துள்ளது. இக்காலத்துத் தெலுங்குப் பாஷையில் இடம் பெற்றதுபோல் அது அக்காலத்தில் தமிழ் பிரதான வழக்கிலிருந்தது. புறநானூற்றின் 396-ம் பாடலில் "உந்து" என்ற இடைச்சொல் "வழங்குந்து, பூக்குந்து, ஒப்புந்து, இரியுந்து, தாங்குந்து" என்ற ஐந்து பதங்களோடு வருதலைக்காண்க. "ந்து" என்ற இடைச்சொல் "மகிழ்" என்ற பதத்தோடு அதேபாடலில் வருதல் ஒரேயொருமுறை மாத்திரமென உணர்க. ஆனால், "மகிழ்ந்து" என இன்றுவழங்கி வருதலைக்காண்க. மொழிநூற்பயிற்சியுடையோருக்கு "உந்து" என்ற பிற்சேர்க்கை பிற்காலத்தில் வழங்கியுள்ள "ந்து" என்ற பதத்துடன் சம்பந்தப்பட்டிருத்தல் இலகுவில் புலனாகும்.

"உந்து" என்பது புறம் 396-ம்பாடலில் மாத்திரமன்றி, 400-ம்பாடலிலும், 14-ம்அடியில், "தாங்குந்து" எனவருதல்காண்க. இத்தகைய மிகப்பழைய இடைச்சொற்கள், அடிகள் இடையிடையே கிடைக்காதொழிந்த மிகப்பழைய புறநானூற்றுப் பாடல்களிலேயே அடிக்கடி உபயோகிக்கப்படுகின்றன உதாரணம் புறம் 400, 399, 398, 396, 395, 393, 391, 390, 388, 387, 384. புறம் 384-ம்பாடலில், "உந்து" என்பது குறைந்தபட்சம் இருமுறை, அதாவது, 7-ம், 9-ம், அடிகளில், "உறைக்குந்து", "வைகுந்து" என்னும் வார்த்தைகளில் இடம்பெறுகின்றது. இப்பாடலின் 5-ம்அடி அடியோடொழிந்து விட்டது; 10, 13, 18, 19-ம் அடிகளிற் சிற்சிலசொற்கள் காணப்படவில்லை. புறம் 269-ம்பாட்டிலிருந்து 400-ம் பாடல் ஈறுக மிகச் சிலவற்றிற்கே இத்தகைய முடிவுண்டு.

ஆயின், இவற்றிற்கு இலக்கத்தில் முந்திய பாடல்கள் பெரும்பாலும் முடிவுடையன. இத்தகைய தன்மைகளால் இலக்கத்தில் பிந்திய இப்புறநானூற்றுப் பாடல்களே, காலத்தில் மிக முந்தியன என எண்ண இடமேற்படுகிறது. K. N. சிவராஜாப்பிள்ளையவர்கள் மாறுபட்ட முறைப்படி, "in the reverse order", இப்பாடல்கள் கி.பி. 6-ம்நூற்றாண்டில் ஒரு குறிக்கப்பட்ட நோக்கங்கருதியே தொகுத்துச் சேர்த்து அமைக்கப்பட்டிருக்க வேண்டுமென்கின்றார். இது உண்மையாயினென் பொய்யாகிலென், பேரிலக்கங்களையுடைய புறநானூற்றுப் பாடல்களிலேயே மிகப் பழைய பாக்களை நாம் காண்போம். காதலைக் கருதும் அகம், யுத்தம்பற்றி இயம்பும் புறம் ஆகிய நூல்களில் வரும் இப்பாடல்களை நாம் மதிப்பிட வேறு ஓரளவை உண்டு. மன்னர், பிரதானிகள், வேளிர், வள்ளல்கள், வம்சாவளிகள், பட்டினங்கள் ஆகியவற்றின் பெயரும் காலமும் ஆகிய சரித்திரப் பின்னணிகளே அவ்வளவையாகும். இத்தொடர்பில் அசோக மன்னனது 2-ம், 13-ம் ஸ்ஹாபாஸ் கர்ஹி (the Shabazgarhi version) முறைப்படி, கல்வெட்டுக்கள் ஒருகாலத்தில் தென்னிந்தியாவையாண்ட சத்திய புத்திர, கேரள புத்திர, ஹிடமன்னன் (Hida King), சோழபாண்டிய வம்சாவளி என்னும் ஐந்தையும் குறிப்பிடுகின்றன. மூன்று மண்டலப்பிரிவு இதற்கு வெகு காலத்திற்குப் பின்னரே ஏற்படலாயிற்று. முடியுடை மன்னர்ஆகிய சேர, சோழ, பாண்டிய மூவரைப்பற்றிய கொள்கைகள் மிகப் பிந்தியவையே. K. N. சிவராஜாப்பிள்ளையவர்கள் அதேநூலில் அநேகமாகாண அரசியற்பிரிவுகள் (Principalities or city-states) கி. மு. 50-ம் ஆண்டு தொடங்கி, கி. பி. 1-ம்நூற்றாண்டுவரை, சேர, சோழ, பாண்டிய மண்டலங்களோடு சேர்ந்திருந்ததெனக் குறிப்பிடுகிறார். பத்துப்பாட்டு ஏறக்குறைய முழுவதும் இக்காலத்திற்கோ இதற்கும் பிந்தியகாலத்திற்கோ உரியது. ஆயின், புறநானூற்றுப் பாடல்களில் பெருந்தொகையானவையும், அகந்தழுவிய குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு ஆகிய மூன்று நானூற்றுத் தொகை பாடல்களிற் பலவும் இக்காலத்திற்கு மிக முந்தியனவே. இம் முந்தியகாலப் பாடல்கள் தோன்றும்போது, தமிழ் நாட்டில் மூன்று மண்டலங்களேயன்றி வேறு பல பிரிவுகள[illegible] மேலேகுறித்த அசோக சக்கரவர்த்தி[illegible]

(8-ம் பக்கம் பார்க்க)

அ. பி. வ. ராசம் அவர்களின்
2-ம் வருட
மரணஞாபகம்



பிறப்பு: 1876 இறப்பு: 1960

மிகவும் மதுரயேசுவே! தேவரீர் சிலுவையில் தொங்கும்போது அனுபவித்த அளவில்லாத கஸ்தியைப்பார்த்து, இவ்வாத்துமத்தை இரட்சித்து உமது மோட்ச இராச்சியத்தின் செல்வ பாக்கியங்களுக்கும், நித்தியானந்த சந்தோஷத்துக்கும் பங்காளியாயிருக்கக் கிருபைசெய்தருளும், சுவாமி.

எங்களால் என்றும் மறக்கக்கூடாதவிதமாய் எங்களைநேசித்த எங்கள் நேசத்தந்தை வஸ்தியாம்பிள்ளை ராசம்அவர்கள் மரணமான இரண்டாம்வருடம் 6-3-62-ல் பூர்த்தியாகிறது. ஒருபர. ஒரு அருள். ஒரு திரி.

மக்கள்.

உதயதிசை,
ஊர்காவற்றுறை.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 2917

யாழ்ப்பாணம், சுண்டிக்குளி
1. விக்ரர் மாட்டினும்,
2. பெண் மேரி திரேசாவும்.
தற்பொழுது சிலாபம், யோலண்டில்
— வழக்காளிகள்

எதிராக

யாழ்ப்பாணம், சுண்டிக்குளி
காலஞ்சென்ற
1. சின்னத்தம்பி தம்பிப்பிள்ளை
யாழ்ப்பாணம். ஓல்ட்பாக்ரோட்
2. சாமுவேல் பென்ஜமின்
— பதில் எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டின் M. B. 2917-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணியை, 1962-ம்ஸ்ரீ பங்குனிமீ 31-ம்உ சனிக்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 4,555-ம், 10-7-59 தொடக்கம், 29-9-59 வரைக்கும் ரூபா 3,000-க்குப் 12%வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5% வட்டியும், கோட்டுச் செலவு ரூபா 283-92 சதமும். இதில் ரூபா 1,000 கொடுபட்டிருக்கிறது.

### ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திரிக் யாழ்ப்பாணப்பகுதி, சுண்டிக்குளி கோயிற்பற்று, சுண்டிக்குளிஇறை "முதலைக்குளப்புலம்" பர. நில. இலா. 4-ம், குளி 12½யும், வீடும், கிணறும், செய்பயிர் வான்பயிர்களும், அதற்குரியவைகளும். லைசென்ஸ் உலாந்தா மேஸ்தர் J. D. வீரசிங்கத்தால் 1304-ம் இலக்கத்தில் அளந்துகொண்ட படத்தின்படி லொட் 1 (ஒன்று) என்று சுட்டப்பட்ட காணி. எல்லை: கிழக்கு—மைக்கல் செல்லையாவுக்கும், பங்காளருக்கும் உரிய ஆதனம். வடக்கு — கையொழுங்கை. மேற்கு—ரோட்டு. தெற்கு — மேற்சொல்லிய சேர்வை இலக்கப்படத்தின்படி லொட் 2 (இரண்டு) என்று சுட்டப்பட்ட ஆதனம். இதில் சொரியலாய் அரைவாசி. இதடங்கலும்.

அ. ஜெகநாதன்,
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
16 A, அம்மன் ரோட்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 3868

வலிகாமம், கிழக்குக் கூட்டுறவுக் கமத்தொழில் உற்பத்தி விற்பனவுச் சங்கம் தற்பொழுது, ஆவரங்கால் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் லிமிட்டெட்.
— வழக்காளி.

எதிராக
சிறுப்பிட்டி
வயித்திலிங்கம் முத்துசாமி
— எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டின் M. B. 3868-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் மூன்று துண்டுக் காணிகளை,1962-ம்ஸ்ரீ பங்குனிமீ 31-ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 870-ம், 31-1-61 தொடக்கம், 23-10-61 வரைக்கும் ரூபா 750-க்கு 4 வீதவட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதவட்டியும், கோட்டுச் செலவு ரூபா 168-97 சதமும்.

### ஆதனங்களின் விபரம்

1 வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திரிக் வலிகாமம் கிழக்குப்பகுதி, கோப்பாய்க் கோயிற்பற்று, நீர்வேலிஇறை "வடுவாவுடை" பர. செ. இலா. 17-ம், குளி 1½ யும். எல்லை: கிழக்கு—வயித்திலிங்கம் வயிரமுத்துவுக்கும், மறுபேருக்குமுரிய ஆதனம். வடக்கு—கார்த்திகேசு மயில்வாகனத்துக்குரிய ஆதனம். மேற்கு—நாகமுத்து கந்தையாவுக்குரியஆதனம். தெற்கு—தம்பிப்பிள்ளை பெண் தெய்வானைப்பிள்ளைக்கும், பங்காளருக்கும் உரிய ஆதனம். இவ்வாதனம் K $\frac{176}{141}$ஆம் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திரிக் வலிகாமம் கிழக்குப்பகுதி, புத்தூர் கோயிற்பற்று, சிறுப்பிட்டிஇறை "புலிநின்ற அம்பலத்தலை" பர. செ. இலா. 25. இதில் தெற்குப்பக்கமாகப் பர. செ. இலா. 13 (பதின்மூன்று). எல்லை: கிழக்கு—இராமலிங்கம் பூதத்தம்பியின் உரிமைக்காரருக்குரிய ஆதனம். வடக்கு—வயித்திலிங்கம் சின்னையாவுக்குரிய ஆதனம். மேற்கும், தெற்கும்—வயித்திலிங்கம் வயிரமுத்துவுக்குரிய ஆதனங்கள். இவ்வாதனம் K $\frac{176}{142}$ஆம் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

3. மேற்படிஇறை "ஒடைத்திடலும், இயத்தையும்" நிலப்பரப்பு 8$\frac{15}{16}$. இதில் பரப்பு 4$\frac{15}{16}$-ம், செய்பயிர், வான்பயிர்களும். எல்லை: கிழக்கு — வெற்றிவேலு கதிர்காமுக்குரிய ஆதனம். வடக்கு—ஒழுங்கை. மேற்கு— வயித்திலிங்கம் சின்னையாவுக்குரிய ஆதனம். தெற்கு—பொன்னையா செல்வராசாவின் ஆதனம். இதடங்கலும். கிழக்குப்பக்கத்தில் இருக்கும் கிணற்றில் பங்கும், வழிவாய்க்கால் பாவிப்புரித்தும். இவ்வாதனம் K$\frac{176}{143}$ஆம் இலக்கத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

அ. ஜெகநாதன்,
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
16 A, அம்மன் ரோட்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

---

### நன்றித்துதி

அண்டினோரைக் கைவிடாத பேருபகாரியான பரிசுத்த சதாசகாயமாதாவின் அனுக்கிரகத்தாலும், அர்ச். அந்தோனியார், அர்ச். 10-ம் பத்திநாதர்முதலாம் அர்ச்சியசிட்டவர்களின் உதவியாலும் கடந்த எட்டுவருடகாலமாக இருந்தவிடம் தெரியாமல் நான்தேடியலைந்த என்கணவரின் இருப்பிடத்தை அறிந்துகொண்டேன். இன்னும் கடந்த பன்னிருவருடகாலமாக என்னை வருத்தியநோயும் குணமாகிவிட்டது. இப்போது பூரணசுகம். பெரிதும் நன்றியறிதலோடு எனதுநேர்த்தியைப் பூர்த்திசெய்கிறேன்.

ஓர் அடியாள், ஏ. எல். எம்.

---

"ஒற்றுமையீனம் வலிமையை அழிக்கும்; தீயஒழுக்கம் உடம்பை அழிக்கும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உல்லாச வேளை

—நமது நிருபர் அமலன்

## ● மற்றொரு லூக்கா ● கபிறினி அன்னை ● கல்மேலெழுந்த சபை
## ● கொலம்பஸின் படையணி ● கொலம்பியா

அப்பா: நேற்று அரசினர் வைத்திய சாலைக்குச் சென்றிருந்தேன். அங்கு நீண்டகாலமாகச் சிகிச்சை பெறும் பிறசமய நண்பரொருவரைக் கண்டேன். தாதிமாரான கன்னியர்களின் சேவையைப் புகழ்ந்து பாராட்டினார் அவர். இவர்களின் சேவை வருங் காலத்தில் இலங்கைக்குக் கிடைக்காதென்பதையிட்டும் அவர் வருத்தம் தெரிவித்தார்.

அகஸ்ரின்: இல்லறத்தவர்களான மருத்துவர்களை விட, துறவறத்தவர்கட்குச் சேவையாற்றுவதற்கு எவ்வளவோ வசதிகள் உண்டு. தேவனுக்காகத் தங்களையே பரித்தியாகம் செய்வதால் பலனெதையும் அவர்கள் எதிர்பார்ப்பதில்லை.

பெரியண்ணு: சுவிசேஷகரான அர்ச். லூக்காவும் ஒரு மருத்துவர்தானே. அந்தக் காலத்திலிருந்தே துறவிகள் மருத்துவப் பணியில் ஈடுபட்டு வருகிறார்கள்.

அகஸ்ரின்: பாகிஸ்தானில் பாகல்பூர் என்ற பிரதேசத்தில் லூக்கா என்ற குரவரொருவர் வைத்தியசேவையாற்றி வருகிறார். இவரின் சேவையைப் பாகிஸ்தானிய அரசாங்கம் வெகுவாகப் பாராட்டியுள்ளது.

கார்மெலா: அக்குருவரும் பாகிஸ்தானியரா?

அகஸ்ரின்: இல்லை, அமெரிக்கர். நியூயோர்க்நகர வின்சென்ற் பல்கலைக் கழகத்தில் மருத்துவத்துறையில் பட்டம்பெற்றவர். 1955-ல் குருத்துவம் பெற்றபின் இங்கு வந்து பணியாற்றுகிறார்.

அன்ரன்: வைத்திய சாலையொன்றை நடாத்துகிறாரோ?

அகஸ்ரின்: இல்லை, நவீன மருத்துவ வசதிகளடங்கிய சிறு வைத்திய சாலைபோன்ற பஸ்வண்டியொன்றுடன் ஒவ்வொரு கிராமமாகச் சுற்றிவருகிறார். இந்த நடமாடும் மருத்துவமனை தங்கள்கிராமத்துக்கு வரும்தினத்தைப் பாகல்பூரிலுள்ள ஒவ்வொரு கிராமத்தவர்களும் ஆவலுடன் எதிர்பார்த்திருப்பார்களாம். இந்தக் குரவருக்கு வயது 37 தான்.

அம்மா: நல்ல இளவயசு. தேவனுக்காகப் பணிசெய்யும் ஆசை. ஆகவே, சலிப்பில்லாமல் உழைக்கிறார்.

பெரியண்ணு: அமெரிக்க துறவி பாகிஸ்தானுக்கு வந்து சேவையாற்றுவதுபற்றி அத்தான் குறிப்பிட்டார். பலவருடங்கட்கு முன்னர் இத்தாலிய துறவியொருத்தி அமெரிக்காவுக்குச் சென்று தேவதொண்டில் ஈடுபட்டார். அமெரிக்காவில் புனிதர் என்ற கௌரவத்தை முதலில் அடைந்த பெருமையும் இவருக்குண்டு.

நிர்மலா: கபிறினி அன்னையைத் தானே குறிப்பிடுகிறீர்கள். றோமையில் இராயப்பர் மகாலய சுரங்க அறைகளில் அப்போஸ்தலர்களின் கல்லறைக்கு மேலாக இவ்வன்னையின் உயிரோவியம் அமைந்துள்ளதென அண்மையில் ஒருசஞ்சிகையில்வாசித்தேன்.

பெரியண்ணு: 1889-ம் ஆண்டு தனது 39-வது வயதில் கபிறினி அம்மையார் அமெரிக்காவுக்குச் சென்றார். இத்தாலியதேச மிலான்நகரைச் சேர்ந்தவர் இவர். அமெரிக்காவில் மேலதிகாரிகளின் அனுமதியுடன் திரு இருதய வேதபோதக சகோதரிகளின் சபையை ஆரம்பித்தார். இச்சபை பாடசாலைகள், மருத்துவ மனைகள், அனாதர்சாலைகளை நிர்வகிக்க ஆரம்பித்தது. 1917-ம் ஆண்டில் கபிறினி அன்னையார் இறக்கும்போது இச்சபை 67 தாபனங்களை நிர்வகித்துவந்ததாம். இன்று இச்சகோதரிகள் மூன்று கண்டங்களில் ஆயிரக்கணக்கான கல்விச்சாலைகள், மருத்துவமனைகள், அனாதை விடுதிகளைச் சிறந்தமுறையில் நடாத்துகின்றனர்.

நிர்மலா: நாலாயிரத்துக்கு மதிகமாக இச்சபையின் கன்னியர் தொகை விர்த்தியாகியுள்ளதாம்.

அஞ்சலா: இவ்விதம் நம் சத்திய திருச்சபையின் பல்வேறு சபைகளும் போர்ப்படையணிகள்போலப் பல தளபதிகளின்கீழ் கிறீஸ்துவின் சுவிசேஷத்தைப் போதனையிலும், சாதனையிலும் காட்டிவருவதைக் கண்டு பொறாமையுற்றோர் இச்சைனியங்களை அழித்துவிடில், கத்தோலிக்கத்தையே ஒழித்துவிடலாமென எண்ணிப் பலவித பிரயத்தனங்களையும் மேற்கொள்கிறார்களே.

அன்ரன்: கத்தோலிக்க சேவையின் உண்மையான கருத்தை அறியாத இவர்கள் இப்போது அச்சேவைபற்றிய தவறான பிரசாரத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

அம்மா: "இராயப்பா! நீ கல்லாயிருக்கிறாய்; இக் கல்லின்மேல் என் திருச்சபையை எழுப்புவேன்; நரகத்தின் வாசல்கள் அதை மேற்கொள்ள மாட்டா" என எங்களாண்டவர் கூறியிருக்கிறார். எனவே, திருச்சபையை அழித்துவிடலாமென மனப்பால் குடிப்பது தவறானது.

அப்பா: என்றாலும் கத்தோலிக்க திருச்சபையின் கொள்கைகள், போதனைகள், நடைமுறைகள் என்பனவற்றைக் கத்தோலிக்கரல்லாதாரும் அறியச் செய்யவேண்டும். அங்ஙனம் அறிந்துகொண்டால் கத்தோலிக்க மதம்பற்றிய தப்பபிப்பிராயங்கள் அவர்கள் மனதிலிருந்து நீங்கிவிடும்.

அகஸ்ரின்: மேலை நாடுகளில் இவ்வித பிரசாரம் ஓரளவு பயனளித்துள்ளது. அமெரிக்காவிலுள்ள கொலம்பஸின் படையணியினர் இத்துறையில் வெற்றியும் கண்டுள்ளனர்.

அன்ரன்: கொலம்பஸின் படையணியா?

அகஸ்ரின்: அயர்லாந்தில் ஆரம்பிக்கப்பட்டு, உலகமுழுவதிலும் ஏராளமான கிளைஸ்தாபனங்களைக் கொண்டு விளங்கும் மரியாயின்சேனையைப்போல அமெரிக்காவில் கீர்த்திபெற்று விளங்கும் ஒரு சைனியமே கொலம்பஸின் படையணி. இந்தநிறுவனம் கத்தோலிக்கரது ஆயுள்காப்புறுதி (Life Insurance), மற்றும் விபத்து முதலிய காப்புறுதிகள் அளிப்பதாலும், புத்தக வெளியீடு, பத்திரிகை நிறுவனம் முதலியவற்றாலும் ஏராளமானவருவாயைப் பெறுகிறது. அவ்வருவாய் முழுவதையும் கத்தோலிக்ககல்வியை இலவசமாகப் பரப்புவதில் செலவிடுகிறது.

கார்மெலா: கத்தோலிக்கபிரசுரங்களை அச்சிட்டு இலவசமாகக் கொடுக்கிறார்களோ?

அகஸ்ரின்: இல்லை, அதிக வினியோகமுள்ளதும், மக்கள்மத்தியில் பிரபலம் பெற்றவையுமான பத்திரிகைகளில் ஒருபக்கத்தில் அல்லது அரைப் பக்கத்தில் கவர்ச்சிகரமான முறையில் கிறிஸ்தவ கொள்கையொன்றை விளம்பரம் செய்கின்றனர். இதற்கெனப் பாண்டித்தியம்பெற்ற வேதவிற்பன்னர்களான குருக்கள், கன்னியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவ் விளம்பரங்களின் அடியில் இதுபோன்ற உண்மைகளை அறிய இம்முகவரிக்கு விண்ணப்பியுங்களெனத் தெரிவிக்கப்படும். விண்ணப்பம்செய்வோர் முதலில் சுவிசேஷம் சம்பந்தமான கத்தோலிக்க கொள்கைகள் பற்றிய பாடங்களைப் பெறுவர். இதன்மூலம் கிறீஸ்துவின் உண்மைமதம் எதுவென்பதைத் தெரிந்துகொண்டபின் கத்தோலிக்க மதத்தின் நடைமுறைகள், கொள்கைகள் முதலியனபற்றி அறிய மீண்டும் விண்ணப்பிக்கவேண்டும்.

அன்ரன்: விருப்பமில்லாதவர்கள் விட்டுவிடலாம். அதற்காகத்தான் இடையிடையே மீண்டும் விண்ணப்பம் செய்யும்படி நியமித்திருக்கிறார்களாக்கும்.

பெரியண்ணு: திருச்சபை தனது கொள்கைகளைச் சர்வாதிகார முறையில் ஒருபோதும் பரப்புவதில்லையே,

அகஸ்ரின்: இவ்விதம் கடந்த பதின்மூன்று வருடங்களிலும் 40,86,334 பேர் கொலம்பஸின் படையணியிலிருந்து இலவசமாகக் கத்தோலிக்க கல்வியைப் பெற்றுள்ளனர். இவர்களில் 4,28,446 பேர் உண்மையொளி இதுவென்பதையறிந்து ஞான முழுக்குப் பெற்றுள்ளனர். இதிலிருந்து கொலம்பஸின் படையணியின் தொண்டு நன்கு புலனாகிறதல்லவா?

அஞ்சலா: இந்தப்படையணியினர் ஏதோ பத்திரிகை நடாத்துவதாகக் கூறினீர்களே!

பெரியண்ணு: இங்கு வருகிறதே கொலம்பியாப் பத்திரிகை, அதுதான். அமெரிக்காவின் கத்தோலிக்க மாத வெளியீடுகளில் அதிக விற்பனையுள்ள சஞ்சிகை இது. படையணியினரின் செய்திகளையே முக்கியமாகக் கொண்டுள்ளது.

---

## பழந்தமிழ் இலக்கியங் ...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

யினது கல்வெட்டுக்கள் மாத்திரமேயன்றி; இப்பொழுது கூறவிருக்குஞ் சில குறிப்புக்களும் போதியசான்றாகும்.

இங்ஙனம் குறுந்தொகை பின்வரும் அரசர்களைப்பற்றியோ சிற்றரசர்களைப் பற்றியோ கூறுகிறது:

**1. "ஆய்"** இவன் இடையமன்னன் அல்லது அசோகனின் கல்வெட்டு கூறிய "ஹிட" அரசன்போலும். குறுந்தொகை, 84: 3.

புறநானூறு 128: 5 "கழல்தொடி ஆஅய்மழைதவழ் பொதியில்" என்பதுடன் ஒப்பிடுக. இதனால் இவன் தென்னிந்தியாவிலுள்ள பொதியமலைச் சாரல்களின் மன்னனும் என்பது பெற்றாம்.

**2. அழிசி:** குறுந்தொகை, 258: 2—7; ஆர்க்காட்டு மன்னன் இவன்.

நற்றிணையின் 190-ம்பாட்டில், 4-ம் அடி முதலாகவும் 6-ம்அடி ஈறாகவும் இவனைப்பற்றியனவே.

**3. அதிகன்:** சத்தியபுத்திரன் போலும்; குறுந்தொகை, 393: 4.

**4. 1-ம் எவ்வி:** "எவ்வி இழந்த வறுமை யாழ்ப்பாணர்,"

குறுந்தொகை, 19: 1.

**5. எழினி:** "வெம்போர் நுகம் படக் கடக்கும் பல்வேல் எழினி",

குறுந்தொகை, 80: 5.

**6. சேந்தன்:** "காவிரிப் பெருந்துறை மருதொடு பிணித்த ஏந்து கோட்டியானைச் சேந்தன்,"

குறுந்தொகை, 258: 4.

**7. கட்டி:** "குல்லைக் கண்ணி வடுகர் முனையது பல்வேற்கட்டி,"

குறுந்தொகை, 11: 6.

**8. நள்ளி:** "திண்தேர் நள்ளி,"

குறுந்தொகை, 210: 1. இத்துடன் ஒப்பிடுக, புறநானூறு 158: 16.

தள்ளாது ஈயும் தகைசால் வண்மைக் கொள்ளார் ஓட்டியநள்ளி......

**9. 1-ம் நன்னன்:** மேலைக்கடற் கரைப்பூழி ஊரிலுள்ளவன்,

குறுந்தொகை, 73: 2.

**10. மலையன்:** தென்னிந்திய மத்திய மலைப்பிரதேசத்தவன்,

குறுந்தொகை, 312: 2.

"முரண்கொள் துப்பின் செவ்வேல் மலையன்" இத்துடன் புறநானூறு 158: 6-7 வரிகளை ஒப்பிடுக.

ஆகவே, குறுந்தொகையில் மும்மண்டலாதிபரைவிட வேறு பத்து மன்னர்கள் பற்றிய குறிப்பைக் காண்கின்றோம். மும்மண்டலாதிபரையும் ஒன்றுசேரவைத்து எண்ணுதல்பற்றி யாதுங் காணப்படவில்லை. சேர மன்னரைப் பற்றிய பேச்சேயில்லை. சோழத்தலைவர்களைப்பற்றி ஒரேஒரு குறிப்புமாத்திரம் உளது. குறுந்தொகை, 116: 2. பாண்டியரைப்பற்றியும் அங்ஙனமே: குறுந்தொகை, 393: 4, வழக்கிழந்தநடை, தொல்வினையெச்சங்கள், பழையவினைகள். பழையகொண்டு கூட்டுக்கள் ஆகிய அளவைகளாலும், புறநானூற்றிலுள்ளனவாகக் குறிக்கப்பட்ட பாடல்களும் அகநானூற்றில் இப்போது நாம் குறிப்பிடஇருக்கும் பாடல்களும் தவிர, குறுந்தொகையில் மிகப்பழைய பாடல்கள் உளவாதலை இத்தால் நாம் அறியலாம். இதனை நாம் கூறும்போது, தமிழ் இலக்கணங்களை விலக்கியே குறிப்பிடுகின்றோம்; அதாவது, தொல்காப்பியம், அகத்தியம் இவைபற்றி யாம் இப்போது யாதும் கூறுவதற்கில்லை.

(வளரும்)

---

## பஞ்சிகை ஞாயிறு

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

எல்லாவற்றையும் என்னிடத்தில் இழுத்துக் கொள்வேன் (அரு. 12: 32) என்கிறார் கிறிஸ்து. வெகுசீக்கிரத்தில் பலியைமுடித்து எம்மைப் போகச் சொல்லுவார்; "போய், நாம் மேற் கூறியபடி சகலத்தையும் நடத்திக் கொள்ளுங்கள்" என்று கூறுகிறார். ஆம், கோவிலில் பலிப்பூசைமுடிந்தது. ஆனால் உங்கள் வாழ்க்கையின் பலி இப்பொழுதுதான் தொடங்கி இருக்கிறது. ஆகையால், அயலாரிடம் பொறுமையுள்ளவர்களாகவும், பட்சமுள்ளவர்களாகவும், சாந்தமுள்ளவர்களாகவும், சகலத்தையும் சகிக்கும்தன்மையுள்ளவர்களாகவும், சகலத்தையும் நம்புகிறவர்களாகவும்இருங்கள். இதே விதத்தில் அல்லவோ நாம் காணிக்கை வாக்கியத்திலும் "அமைதி மன்றாட்டிலும்" உள்ள உட்கருத்தை விளங்கிக்கொள்ளவும், அதை எங்களுக்குப் படிப்பித்தருளவும், அவரால் சுத்தப்படுத்தப்படவும் வேண்டிக் கொள்ளுகிறோம்.

கடைசியாக, அவர்மூலம் தேவ நேசத்தைக் கற்றும், பெற்றுமிருக்கிற நாம் அதனால் கிறிஸ்துவில் ஐக்கியப்பட்டு, அவருடைய நிகழ்ச்சிநிரலான அன்பின் ஈடேற்றத்தை நிறைவேற்றுவோமாக!

---

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Sunday March 4-1962

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org